
# திருக்கோயில்

ஜூலை 1994 விலை ரூ. 3-00





காஞ்சி ஸ்ரீ இளைய சங்கராச்சாரியார் சுவாமிகளின் முன்னிலையில் திருவல்லிக்கேணி அருள்மிகு காமகலா காமேஸ்வரர் ஆலயத் திருக்குட நீராட்டு விழா அண்மையில் மிகச் சிறப்பாக நடை பெற்றது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு நடேசன் பால்ராஜ் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



மகப்பு :

குமரன் குன்று
அருள்மிகு சுவாமிநாத சுவாமி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர் :
கவிஞர் டாக்டர் ந. அமிர்தலிங்கம், M.A., Ph.D

மாலை : 36
திருவள்ளுவர் ஆண்டு 2025 பவ ஆண்டு ஆடி
ஜூலை 1994 விலை ரூ. 3-00
மணி: 7

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

தென்னிந்தியத் திருக்கோயில் கலைக்கூடம்

அலங்கார நாயகன்
—கம்பன் கவிநயமணிவே தியாகராஜன்

ஞானத்தின் முதல்படி
—மு. பாலவடிவேல்

குமரகோட்டம்
—தி. பழநி. பி. ஏ. பி எல்,

மத்தூர் மகிஷாசுர மர்த்தினியே
—இரா பரமேஸ்வரன் எம். ஏ.,

இராமபிரானின் ஒப்பற்ற அழகு
—ஆ. சுப்பிரமணியம்

மங்களாசாசனம்
—டாக்டர் தெ. ஞானசுந்தரம்

வினைப்பாசம் அறமுயன்ற திருக்குறிப்புத்தொண்டர்
—சா. சரவணன், எம். ஏ.

அறங்காவலரும் ஞமலியும்
—முருகதாஸ் தீர்த்தபதி

கண்ணன் திருமேனி அழகு
—திருக்குடந்தை செளரிராஜ திருவேங்கடத்தான்

சைவத்தின் மேன்மை
—மு. சுந்தரேசனார்

பெரியபுராணத்தைப் போற்றுவமே
—கலைப்பொழிலன்.

ஆலய விளக்கமும் வழிபாட்டு முறைகளும்
—இராம. சீனிவாசன்

நாலாயிரத் திவ்வியபிரபந்த நயவுரை
—டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# தென் இந்தியத் திருக்கோயில் கலைக் கூடம்



மாண்புமிகு தமிழக முதலவர்
**டாக்டர் புரட்சித் தலைவி**
அவர்களின் அறிவிப்பு

தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் 21.7-94 அன்று மாலை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் நடேசன் பால்ராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நல அமைச்சர் எம். ஆனந்தன், மாண்புமிகு தலைமைச் செயலாளர் என்.ஹரிபாஸ்கர், திருமிகு பா. சிவந்தி ஆதித்தன், வணிகவரி மற்றும் அறநிலையத்துறை செயலர், பொதுப் பணிதுறை தலைமைப் பொறியாளர், ஸ்ரீ தொண்டைமண்டல ஆதீனம் தவத்திரு ஞானப் பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், திருமிகு டி. எஸ். சந்தானம், முன்னாள் அட்டர்னி ஜெனரல் கே. பராசரன், அக்னி கோத்ரம் ராமானுஜதாத்தாச்சாரியார், இந்து அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். மற்றும் தொல்பொருள் துறை இயக்குநர் நடன காசிநாதன் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்ட முடிவுகள் பற்றி, தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது.:

''3 மணி நேரம் நடந்த திருக்கோவில் நிர்வாக வாரிய கூட்டத்தில் 191 பொருட்கள் பற்றி விவாதிக்கப்பட்டது.

**திருக்கோவில் கலைக்கூடம்**

பல்வேறு திருக்கோவில்களின் கட்டுமானப் பணிகள் மற்றும் திருப்பணி குழுக்கள் அமைப்பு சம்பந்தமாக இந்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது, தொன்மையான சரித்திரத்தையும், தமிழகத்தின் கலாசாரத்தையும் வெளிப்படுத்தும் கலைப்பொக்கிசங்களைக்

கொண்ட திருக்கோவில்களின் வரலாற்றை பிரதிபலிக்கின்ற வண்ணம் ''தென்னிந்திய திருக்கோவில் கலைக்கூடம்'' ஒன்றினை அமைக்க வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கனவே அறிவித்திருந்தார்கள்.

அந்த அறிவிப்பினை தொடர்ந்து தென்னிந்திய திருக்கோவில் கலைக்கூடம் சென்னைக்கு அருகில் உள்ள முட்டுக்காடு கிராமத்தில் அமைப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலைக்கூடத்தை ரூ. ஒன்றரை கோடி செலவில் கட்டி முடிக்க இன்று திருக்கோவில் நிர்வாக வாரியம் ஒப்புதல் அளித்தது. இந்த கலைக்கூடம் அமைப்பதற்கான நிதி ஏனைய திருக்கோவில்களின் உபரி நிதியிலிருந்து பெற்று விரைவில் இந்த பணியை மேற்கொள்ள வேண்டுமென திருக்கோவில் நிர்வாக வாரியம் ஆணையிட்டுள்ளது.

**வரலாற்று சின்னங்கள் பாதுகாப்பு**

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் பராமரிப்பின் கீழ் உள்ள வழிபாட்டில் இல்லாத வரலாற்று சின்னங்கள் மற்றும் கலைப் பொக்கிசங்களான புராதன கோவில்களை நன்முறையில் பாதுகாக்கப்படவேண்டும் என்றும், பராமரிக்கப்பட வேண்டும் என்பதற்காக, தமிழ்நாடு திருக்கோவில் நிர்வாக வாரியம் 10 லட்சம் ருபாய் நிதியை தமிழக முதலமைச்சரின் திருக்கோவில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இந்தப் பணியை விரைவில் மேற்கொண்டு 66 வரலாற்று சின்னங்களைப் பாதுகாக்க தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

இந்த திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 10 திருக்கோவில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ஒரு லட்சரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த நிதியை ஆதாரமாக வைத்து அந்தந்த திருக்கோவில்களில் உள்ள வரலாற்று சின்னங்களும், கலை நுட்பம் மிக்க சிற்பங்களும் பாதுகாக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

**சாமி நகைகள்**

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள எல்லா திருக்கோவில்களிலும் உள்ள தெய்வங்களுக்கு சாத்தப்பட்டுள்ள தங்க, வெள்ளி, வைர நகைகள், ஆபரணங்கள் போன்றவற்றை புகைப்படம் எடுத்து பராமரிக்கப்பட வேண்டுமெனக் கருத்து தெரிவித்தார்கள்.

திருக்கோவில் நிர்வாக வாரியத்தின் உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கருத்தை முழு மனதோடு வரவேற்றார்கள். அதன்படி இன்னும் மூன்று மாத காலத்திற்குள் இதுவரை புகைப்படங்கள் எடுக்காத எல்லா திருக்கோவில்களிலும் தெய்வங்களுக்கு சாத்தப்பட்டுள்ள நகைகள் மற்றும் ஆபரணங்கள் புகைப்படங்கள் எடுத்து பாதுகாப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென இந்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**மருதமலைக் கோவில்**

கோயம்புத்தூர் மாவட்டம் மருதமலை அருள்மிகுசுப்பிரமணியசுவாமி திருக்கோவிலின் ராஜகோபுரத்திற்குச் செல்வதற்குப் படிக்கட்டுகள் மற்றும் அடித்தளம் அமைப்பதற்காக 120 லட்சம் ரூபாய் செலவில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு திருக்கோவில் நிர்வாக வாரியம் இன்று நிர்வாக அனுமதியும், தொழில் நுட்ப அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது. மலையின் மீது புதிதாக கட்டப்பட்டுள்ள ராஜகோபுரத்திற்கு செல்வதற்குப் படிக்கட்டுகளும், அடித்தளத்தில் கடைகளும் இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட உள்ளன.

காமராஜர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள நாச்சியார் திருக்கோவில் சன்னிதியின் இரண்டாவது கட்ட திருப்பணியாக 9-வது நிலை ராஜகோபுரத்தை புதுப்பிக்கும் பணியை 60 லட்ச ரூபாய் செலவில் மேற்கொள்ள அனுமதியை தமிழ்நாடு திருக்கோவில் நிர்வாக வாரியம் வழங்கியுள்ளது.

**ஸ்ரீரங்கம் கோபுரம்**

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் அமைந்துள்ள ரங்கநாதசுவாமி திருக்கோவிலின் தெற்கு ராஜகோபுரத்தில் ஏற்பட்டுள்ள விரிசல்களை ஆராய்ந்து, மேலும் அந்த கோபுரத்தில் பிளவுகள் ஏற்படாத வண்ணம் அந்த கோபுரத்தில் வலுத்தன்மையை பாதுகாக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் 77 லட்ச ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொண்டு அந்த கோபுரத்தில் ஏற்பட்டுள்ள சீர்கேடுகளைச் சரி செய்வது என தமிழ்நாடு திருக்கோவில் நிர்வாக வாரியம் தீர்மானித்துள்ளது. அதன் அடிப்படையில் அந்தக் கோபுரத்தைச் சரி செய்யும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

**தேர்கள்**

பழமையும், தொன்மையும் நிறைந்த பல்வேறு கோயில்களுக்கு சொந்தமானதேர்களைச் செப்பனிடும் பணியை மேற்கொள்வதற்கு முன்பாக அந்த தேர்களின் தொன்மையையும் பழமையையும், பாதுகாக்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை முன் அனுமதியைப் பெற்றபின்பு தேர்த் திருப்பணி மேற்கொள்ளப்பட வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த கருத்தைத் திருக்கோயில் நிர்வாக வாரியத்தின் உறுப்பினர்கள் அனைவரும் முழு மனதோடு ஏற்றுக் கொண்டார்கள். எனவே தேர்களின் தொன்மையையும் பழமையையும் பாதுகாப்பதற்கு இனி இந்த முறை அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அலங்கார நாயகன்

**கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்**

### என்ன ஆனந்தம் ?

உத்தம ஞானிகட்கு உடம்பின் நினைவே இராது. சதாசிவப் பிரம்மேந்திரர் தெரு வழியே செல்லும்போது ஒரு கொடியவன் கையை வெட்டிவிட்டான். கை துண்டாகி நிலத்தில் வீழ அந்தப் பெரியவர் உணர்ச்சியற்று நடந்து போய்க் கொண்டேயிருந்தார். கையை வெட்டியவன் துண்டமாக விழுந்த கையை எடுத்துக் கொண்டு போய், 'என்ன ஐயா? கைவெட்டப்பட்டும் போய்க் கொண்டேயிருக்கின்றீர்களே' என்று கூற, அவர் பதில் ஒன்றும் கூறாமல் அவனது கையிலிருந்த துண்டிக்கப்பட்ட பாகத்தை வாங்கி வெட்டப்பட்ட இடத்தில் வைக்க அது ஒட்டிக் கொண்டது என்பர்.

ஸ்ரீஸ்ருங்கேரி சாரதாபீடம் ஜகத்குருவாக விளங்கிய ஸ்ரீசந்திரசேகரபாரதி சுவாமிகள் ஒரு நண்பரிடம் 'அடுத்த வாரம் நீர் இங்கு மறுபடி இருக்கும்' என்றார். அவர் கூறிய அதே நாளில் ஸ்ரீசுவாமிகள் ஜலசமாதியடைந்தார். ஊருக்குப் போயிருந்த சீடர் அதே நாளில் மடத்திற்குத் திரும்பினார். மரணம் பற்றி முன்கூட்டியறியும் சக்தி நம்நாட்டு ஞானிகளுக்கு இருந்தது.

ஜல சமாதியான பெரியவரின் உடல் தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்ட போது அவர் உடலுக்குள் ஒரு சொட்டு நீர்கூட இல்லை. பத்மாசனமிட்டு அமர்ந்த நிலையிலேயே எடுத்தார்கள்.

நம்நாட்டு ஞானிகள் பற்றி அருணகிரியார் கூறிய அனுபூதி நிலை இது.

''உரையவிழ உணர்வவிழ உளமவிழ உயிரவிழ
உளபடியை உணருமவர்-அனுபூதியானதுவும்''
எனச் சீர்பாத வகுப்பில் கூறப்படுகிறது.

கட்டை மாதிரி வருடக்கணக்காக தவ நிலையிலிருக்கும் ஞானிகள் இமயமலையில் இன்றும் உள்ளனர். அடியேன் தரிசித்திருக்கிறேன். உடல் உணர்ச்சி மறந்த நிலையையே 'இவ்வுடம்பு செத்து விட்டது' எனக் குறிப்பிட்டார்.

கிரௌஞ்சமான மாயை ஒழித்த வேலவரே! கடம்ப மாலையணிந்த பெருமானே! உம்மையறிந்த பேறு பெற்று எல்லாவிதமான உணர்ச்சிகளையும், பேச்சையும் இழந்து ஆனந்த அனுபவம் பெற்றுஉடலை மறந்தேன். உணர்ச்சியற்று உடலே செத்தமாதிரியாகி விட்டது என்கிறார்.

''சொன்ன கிரௌஞ்சக்கிரியூடுருவத்
தொளைத்தவைவேல்
மன்ன! கடம்பின் மலர் மாலை மார்ப!
மௌனத்தையுற்று
நின்னையுணர்ந்து எல்லாம் ஒடுங்கிய நிர்க்
குணம் பூண்டு
என்னை மறந்திருந்தேன் இறந்தேவிட்ட
திவ்வுடம்பே..

### கூடவே வருமோ செல்வம் ?

செல்வம் என்று பெரியோர்கள் பொருளுக்குப் பெயரிட்ட காரணமே 'உன்னை விட்டுச் செல்வோம்-செல்வோம்' என்று கூறுகிறது. நம்மைவிட்டுச் செல்லக்கூடியதால் செல்வோம் என்பது செல்வமாக மருவியது. உன்னிடம் தங்கமாட்டோம் என்பது 'தங்கம்' (தங்கோம்') என்றாயிற்று என்பர். நாம் பொருளீட்டும்போது நம்முடையது என நினைக்கிறோம். ஏதாவது வரி விதித்து இப்பொருளை நாம் கொள்ளுவோம் என அரசாங்கம் நினைக்கிறது. திருடர்கள் நம்மைக் கொள்ளையடிக்க நினைப்பர். உறவினர்கள் தமக்குக் கிடைக்க வேண்டும் என விரும்புவர். உலக மக்கள் யாவரும் தமக்குச் செல்வம் வேண்டுமென்பர். நாம் நம்முடைய்து என நினைப்போம். இது வெறும் சுமைதானே எனச் செல்வத்தை வெறுத்துப் பேசுகிறார் ஒரு கவிஞர்.

''தமதென லோபர் ஈட்டும் தனத்தினைக்
கொடுங்கோல் மன்னர்
எமதென இருப்பர்; கள்வர் எமது என்பர்
கிளைஞரெல்லாம்
உமது எமது என வாதிப்பர்; உலகு எனது
என்னும்; யாமும்
நமதென்போம்; பாரந் தாங்கி நலிவதென்
பிசினரம்மா?''

[தொடரும்]

# ஞானத்தின் முதல்படி

## மு. பாலவடிவேல்

ஒருமுறை சுகமுனிவர் பிரம்ம ஞானம் பெற வேண்டும் என்று விரும்பினார். தகுந்த குருவைத் தேடிச் சென்று உபதேசம் பெற வேண்டும் என்று கருதினார். இதற்காக நாடு நகரமெல்லாம் காடுமேடெல்லாம் ஏறி அலைந்தார்.

பின்பு, மிதுலாபுரியை ஆளுகின்றவரும், இல்லற ஞானமூர்த்தியும் துறவிகளால் போற்றப்படுபவரும் ஆன ஜனகமன்னரே தமக்கு குருவாக இருக்கத்தக்கவர் என்று உணர்ந்து மிதுலாபுரிக்குச் சென்றார்.

வழிதோறும் ஜனக மன்னரின் சிறப்புக் களைக் கேட்டு மகிழ்ந்து அவரைப் பார்க்க விரைந்தார். கொலு மண்டபத்தில் ஜனக மன்னர் வீற்றிருக்கிறார் என்பதை அறிந்து அங்கு போனார். அங்குள்ள காவலாளியிடம்,

'சுகம் பிரம்ம மகரிஷி அவர்கள்' வந்திருப்பதாக உன் அரசனிடம் சொல்' என்று கூறினார்.

காவலர் அவ்வாறே உள்ளே போய் சொன்னான். ஜனக மன்னர் புன்முறுவல் பூத்து 'காவலரே! அவருடன் வந்திருக்கும் நாலு ஆட்களை விட்டுவிட்டு வரச்சொல்' என்றார்.

காவலன் திடுக்கிட்டான். அவர் ஒருவர் தான் வந்திருக்கிறார். அவர் மட்டும் வந்திருப்பதாகத்தான் சொன்னோம். ஆனால் அரசர் இப்படிச் சொல்கிறாரே! தாம் சொன்னது சரியாக கேட்கவில்லையோ!

'அரசே அவர் மட்டும்தான் வந்திருக்கிறார்'

'காவலரே!' நான் சொன்னதை அப்படியே போய்ச் சொல்'.

அரச ஆணையை ஏற்று அப்படியே போய்ச் சொன்னான். காவலனைப் போலவே சுகப்ரம்ம மகரிஷிக்கும் புரியவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தார். தன் பின்னால் வேறு யாரும் இல்லை. தான் மட்டும் தனியாக நிற்பதை உணர்ந்தார்.

ஒரு நிமிடம் சிந்தித்தார். 'சுகம் பிரம்ம மகரிசி அவர்கள்' என்ற அடைமொழியை நீக்கிவிட்டு, 'சுகப்பிரம்ம மகரிசி' வந்திருப்பதாகச் சொல் காவலரே'—

காவலன் உள்ளே போய் அடுத்த நிமிடத்திலேயே வெளியே வந்தார்.

''சுவாமி உங்களுடன் இன்னும் மூவர் உடன் இருக்கிறார்களாம். அவர்களையும் விட்டு விட்டு வரச்சொன்னார் அரசர்'' என்று பணிவாகச் சொன்னான்.

'சுகபிரம்ம ரிஷி வந்திருப்பதாகச் சொல்' காவலன் உள்ளே போய் வந்தான். 'சுவாமி இன்னும் உடன் இருக்கின்ற இருவரையும் விட்டு விட்டு வரச் சொன்னார்.

'சுகபிரம்மம்' வந்திருப்பதாகச் சொல்' காவலர் உள்ளே போய் விட்டு வந்து சொன்னான். 'சுவாமி இன்னும் ஒருவர்' என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் இவர் சொன்னார்.

'அப்பா காவலரே' சுகன்' மட்டும் வந்திருப்பதாகச் சொல்லும் ஐயனே! என்று மிக்கப் பணிவுடன் சொன்னார்.

தெளிவுடன் காத்திருந்தார்.

ஆமாம் பிரம்ம ஞானம் யாருக்கு? அவர்கள் என்ற உயர்வு அடைமொழிக்கா 'மகா' என்ற சிறப்பிற்கா?' 'ரிஷி' என்பதற்கா? 'பிரம்மம்' என்பதற்கா? யாருக்கு! யாருக்கு? தனக்குத்தான். ஆன்மாவிற்குத்தான் உபதேசம்'

சுகனுக்குத்தான் பிரம்ம ஞானம் தேவை. அவருக்குப் புரிந்தது.

ஞானமூர்த்தியான ஜனகரைப் பார்க்காமலேயே புரிந்தது.

பிரம்ம ஞானம் பெறுவதற்கு முதல்படி தெரிந்தது. 'நாமே நம்மைப் பற்றி உயர்வாக நினைக்கின்ற தன்மையை முதலில் விடவேண்டும்'.

'பிரம்ம மகரிஷி அவர்கள்' என்னும் பெருமைகளை விட்டார்.

'சுவாமி உங்களை உள்ளே அழைத்துவரச் சொன்னார். தாங்கள் எழுந்தருள வேண்டும்'

காவலன் மண்டியிட்டு அழைத்தான்.

சுகன் உள்ளே போனார்.

நாமே நம்மைப் பற்றி உயர்வாக நினைக்கின்ற குணத்தை, இதனால், உயிரில் ஏற்பட்டிருக்கிற 'நான்' என்ற ஆணவத்தை— முதலில் நீக்க வேண்டும். இதை நீக்க நம்மை நாமே உணரவேண்டும். இதுவே ஞானம் பெறுவதற்கு முதல் படியாகும்.

# குமரகோட்டம்

தி. பழநி, பி.ஏ., பி.எல்.,

நிர்வாக அதிகாரி,
அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி ஆலயம்,
சென்னை.

''மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயல்பொழில் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே'':

என்று அருணகிரிநாதர் போற்றிப் பாராட்டிப் புகழ்ந்த அந்த மாலோன் மருகன், மன்றாடி மைந்தன். அங்கிங்கெனாதபடி நீக்கமற எங்கும் நிறைந்து விளங்குகிறான். தேவசேனாபதியாகச் சென்று, திக்கெட்டும் வெற்றிமுரசு கொட்டிய தயாபரன், தந்தைக்கு உபதேசம் செய்த ஞானபண்டிதன் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கின்ற தலங்களுள் ஒன்று குமரகோட்டம் என்க.

**திருக்கோயிலின் இருப்பிடம்;**

'தொண்டை நாடு சான்றோ ருடைத்து' என்று, அன்றே பாடிப் போந்தார் ஔவைப் பிராட்டியார். தொண்டை நாடு என்பது இன்றைய சென்னை, செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு பகுதியாகும். தொண்டை மண்டலத்தின் எல்லைகளைக் குறிக்கும்பொழுது. வடக்கே பெண்ணையாறு முதல், தெற்கே தென்னார்க்காட்டில் ஓடும் பெண்ணையாறு வரை உள்ள நிலப்பகுதியைக் குறிக்கின்றனர்.

இத்தொண்டை மண்டலத்தில் சென்னை மாவட்டத்தில், வட சென்னைப் பகுதியில், நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையின் வடபால், (குமரகோட்டம்) அருள்மிகு

சிவ சுப்பிரமணிய சுவாமி
வள்ளி தெய்வானையுடன்

எழுந்தருளி வருவோர்க்கெல்லாம் வரமளிக்கும் வள்ளலாய், பிணியறுக்கும் பெம்மானாய் வீற்றிருக்கின்றார். இங்ஙனம் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்மான், ஆறிரு தடந்தோளால் சூரனைக் கூறிட்ட வேலன், குடிகொண்டிருக்கும் திருத்தலம் தான்

குமரகோட்டம் என்றும்
சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோவில் என்றும், வழங்கப்படுகிறது.

இத்திருத்தலம், பாம்பன் சுவாமிகள் வழிபாடியற்றிய தலமும் ஆகும்.

**திருக்கோயிலின் தோற்றம்:**

இத்திருக்கோயில், சற்றேறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்டது.

இதற்குரிய புராண வரலாறு பின்வருமாறு:

பண்டொருகால் அகஸ்தியர் இத்தலத்தில் தவம் செய்து கொண்டிருக்கும் தருணத்தில், முருகன் பாலகனாகத் தோன்றி அவருக்கு அறிவுரை கூறினார். அவற்றை அகத்தியர் ஒரு பச்சிளம் பாலகனின் சொல்லாக நினைத்து, ஏற்க மறுத்தார்.

அப்பொழுது அன்னை பராசக்தி அகஸ்தியர் முன் தோன்றி 'அகஸ்தியா! அந்தப் பாலகன் வேறு யாருமல்லன். என் அருள் செல்வம் முருகனேதான், என்றுரைக்க, சிவபெருமானும் தோன்றிக் காட்சியளித்தார். விநாயகப் பெருமானும் ஆனந்தக் கூத்தாடினார்.

இப்படிப்பட்ட சிறப்புடைய இத்தலத்தில், அகஸ்தியர், முருகப் பெருமானைப் பிரபிரதிஷ்டை செய்து, கோயில் கொள்ளச் செய்தார் என்று வரலாறு கூறுகிறது.

மேலும், இதன் பிறகு, வந்த காலகட்டங்களில், ஆவயவரலாற்றை நோக்கும்போது, இப்போதுள்ள இத்திருக்கோயில், வாணியர் இனத்தவரால் கட்டப்பட்டது என அறியக் கிடக்கிறது.

**கிழமைகளும் வழிபாடும்:**

இத்திருத்தலத்தில், முருகப் பெருமானை எந்தெந்தக் கிழமைகளில், எவ்வெவ்வாறு வழிபட வேண்டும் என்பதைக் காகபுஜண்ட பெருமான், சத்தியவாக்காகஅருளியிருக்கிறார். பதிவாக்கப்பட்ட அவ்வருள்மொழி பின்வருமாறு:

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் கொண்டிருக்கும் இத்தலத்தில் கதிரவனின் ஆதிக்க நாளான ஞாயிற்றுக்கிழமைகளில், கன்னியர்கள் கோயிலுக்கு வந்து முருகனைத் தரிசித்தால், திருமணம் ஆகும். காலம் காலமாகச் சூழ்ந்திருந்த கொடுமைகள் நீங்கிப் பூரணமான வாழ்வையும், புகழையும் பெற்று, இந்த உலகத்திலும், மறு உலகத்திலும், சத்தியமாக எல்லா நலன்களையும் பெற்றிடுவார்கள்.

காலம் காலமாகச் சூழ்ந்திருந்த கொடுமையான - கடுமையான நோய்கள், விதியினால் ஏற்பட்ட தீராத நோய்கள் உள்ள

வர்கள், அங்காரகனின் நாளான செவ்வாய்க் கிழமைகளில் இத்திருக்கோயிலை நாடி உளம் உருகி முருகனை வேண்டி, சுத்தமான எள் எண்ணெய் (நல்லெண்ணெய்) கொண்டு சுடர் விடும் தீபத்தை ஏற்றி வைத்தால், கருமத்தினால் ஆன வினைகளும், தீராத நோய்களும் தீரும்.

வலிமை பெற்ற குருபகவானின் ஆதிக்க நாளான வியாழக்கிழமைகளில், உளம் கனிந்து, மன நிறைவோடு இத்தலத்தில் நெய் தீபம் (சுத்தமான பசு நெய்) ஏற்றினால், மிகவும் நல்ல பலனைத் தரும். இவ்வாறு ஏற்றி வைத்தால், காலமெல்லாம் சுகபோகத்தைத் தரக்கூடிய மகாலட்சுமியின் அருள் பார்வையான, பேரொளியைக் கண்டு களித்து மனம் நிறைவர்.

சுக்கிர பகவானுடைய ஆதிக்க நாளான வெள்ளிக் கிழமைகளில் வணங்கிடுபவர்கள், தங்கள் வாழ்நாள் எல்லாம் அருள் மயமான மகாலட்சுமியின் கடாட்சத்தில் ஐக்கியமாகி விடுவார்கள். பெருந்தவம் செய்த பெரியோர்கள். ஆன்றோர்கள், முனிவர்கள் வெள்ளிக் கிழமையில், இந்தக் கோயிலில் இதையே கருத்தாகக் கொண்டு வணங்கும் அந்தப் பெரிய நிறைவான காட்சியை யாரால் அறிய முடியும்?

***திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள்:***

இத்திருக்கோயிலில் பல்வேறு கால கட்டங்களில் அமைக்கப்பட்ட கல்வெட்டுகள் (சிலாசாசனம்) இருக்கின்றன. இவை அனைத்தும் திருக்கோயிலின் பல்வேறு காலகட்ட வளர்ச்சியைப் படிப்படியாக நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவையாவன:

கடகால் ஸ்தாபன முகூர்த்த ஆரம்பம்
துவார பந்தன முகூர்த்தம்
உற்சவர் மண்டபத்தில் மண்டப தளவரிசை
திருமதில் கைங்கர்யம்,
கோபுர வாயிற்படி
நாலுகால் மண்டபம்
துவார பாலகர் கைங்கர்யம்
துவஜஸ்தம்ப கைங்கர்யம்
பழனியாண்டவர் மண்டபம் கட்டல்
யாகசாலை கட்டல்
நடராஜர் சந்நிதி மேடை
நால்வர் ஸ்தாபித்தல்
வாகன மண்டபம்
கல்யாண மண்டபம்
அலுவலக அறை கட்டல்
அறங்காவலர் குழு கூடுவதற்கு அறை கட்டல்
கிடங்கு கட்டல்
நீர்த் தேக்கத் தொட்டி, மோட்டார்.பம்புசெட் அமைத்தல்
நவ வீரர்கள் ஸ்தாபிதம்
நிலைக் கண்ணாடி அறை கைங்கர்யம்
பெரிய மணி அமைத்தல்
பலவகை உபயங்கள்

போன்ற வளர்ச்சியினை இக்கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

***அறக்கட்டளைகள்:***

ஆன்றோர் பலர் இத்திருக்கோயிலின் திருப்பணிகளுக்காக, நிலையான அறக்கட்டளைகளை ஏற்படுத்தியுள்ளார்கள். அதன் காரணமாகக் கோயில், பணிகள், அபிஷேக ஆராதனைகள், முதலியவை நிலையாக நடைபெறுவதற்கு வழிவகை ஏற்படலாயிற்று. இவ்வறக்கட்டளைகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

***திருக்கோயில் உற்சவங்கள்:***

குமரகோட்டத்தில், ஆண்டுதோறும் கோலாகலமான முறையில், பல்வேறு உற்சவங்கள் நடைபெறுகின்றன. அவற்றுள் சிறப்பான சில உற்சவங்களை இங்கே காணலாம்.

ஆண்டு பெருந்திருவிழாவில் உபயதாரர்களால் கந்தமாபர்வதமும், தேர்த்திருவிழாவும் நடைபெறுகின்றன.

மேலும், சில விழாக்கள் நடைபெறுகின்றன. அவை வருமாறு:

| உற்சவத்தின் பெயர் | நடைபெறும் மாதம் நாட்கள் |
|---|---|
| வசந்த உற்சவம் | சித்திரை 10 நாட்கள் |
| சுந்தரர் உற்சவம் | ஆவணி 6 நாட்கள் |
| நவராத்திரி உற்சவம் | புரட்டாசி 9 நாட்கள் |
| கந்த சஷ்டி | ஐப்பசி 6 நாட்கள் |
| மாணிக்கவாசகர் உற்சவம் | கார்த்திகை 10 நாட்கள் |
| பிரம்மோற்சவம் | மார்கழி-தை 20 நாட்கள் |

***வேண்டுகோள்:***

இத்திருக்கோயிலின் வளர்ச்சிக்குப் பல்லாற்றாலும், தம்மால் ஒல்லும் வகையால் உதவி வரும் அனைவருக்கும், நாம் ஆக்கமும் ஊக்கமும் அளித்துக் குமரகோட்டத்து அமரனருளால், அனைவரும் அகமகிழ வாழ்வோமாக,
வாழ்க திருக்கோயிலின் புகழ்:
வளர்க திருத்தொண்டர்களின் பணி.

சென்னை குமரகோட்டச் செவ்வேள்
திருவருளால்
இந்நில மாந்தர் இனிதுய்க முன்னை
வினை தீர்ப்பான் விளங்குநல மீவான்:
அனுதினமும் யாம் தொழுவோம் ஆங்கு.

# மத்தூர் மகிஷாசுர மர்த்தினியே!

இரா. பரமேஸ்வரன், எம்.ஏ.,

மகிஷன் எனப்பெயர் கேட்டவர் அஞ்சிடும் வல்அசுரன்
அகிலம் அனைத்தும் அடக்கியே ஆண்டிட ஆசையுடன்
பகல்இர வின்றித் தழல்மேல் நின்று தவம்இயற்ற
மகிழ்ந்த அயனும் அவன்மனம் போல வரமருள,

எருமை முகமும், எரிதவழ் மூச்சும், இருள்மலைபோல்
பருமை உடலும் பனைபோல் கரங்களும் கார்உகிரும்,
புருவப் புதரிடை பொங்குஉலைக் கண்ணும் புகைவாயும்,
பொருமும் இடிபோல் உருமலும் கொண்ட மகிஷன்ஆர்த்து,

கண்டவர் யாரையும் சண்டைக்(கு) அழைத்துக் கொக்கரித்து,
பண்பிலா பஞ்சமா பாதகம் செய்யப் படுதுயரால்,
மண்ணோர் மடிந்திட விண்ணோர் சிறையில் வாட்டமுற
எண்ணரும் துன்பம் இழைத்து மகிஷன் இறுமாப்ப,

அரனும் அரியும் அயனும் அவரவர் சக்திதனை
மறம்மிகும் எண்புஜ மங்கைக் கொடியாய் வடிவமைத்து
கரம்உள தங்கள் படைக்கலம் அவளும் பெறஅளித்து
வரம்ஆர் மகிஷனின் வாழ்வை முடிக்க வரம்அருள்

பாதச் சலங்கை படரிசை பல்லியம் பறைமுழக்க
ஓதச் சிலம்பினில் ஓங்கிசை வெற்றி முரசறைய
நாத நவமணி மேகலை கொற்றக் குரவைஆட,
பாதப் பனிமலர் பாரில் நடமிடப் போர்தொடர

ஓங்கினாள் சூலமும்; வீசினாள் வாளொடு கேடயமும்;
தாங்கினாள் நாண்அதிர் வில்; அதில் தாவுறு கூர்அம்பும்;
ஏங்குற சங்கொலி, சக்கரம் எய்தாள் மகிஷனுயிர்
வாங்கினாள் வல்லி; மத் தூர்மகி ஷாசுர மர்த்தனியே.

கோபம்ஒன் றில்லை, கொடுமை விழிகளில் கூடல்இல்லை
பாபம் படரும் மகிஷனின் உள்ள இருள்விலக்கி,
சாபம் விலக்கி, அவனது தாயாய் அருள்புரிந்தாள்,
தீபம் ஒளிரும்மத் தூர்மகி ஷாசுர மர்த்தனியே!

மையிரா மேனியும் மாமுகில் கேசமும், மந்தகாச
பொய்யிலாப் புன்னகை பூத்திடும் செவ்விதழ்ப் பூமுகமும்,
மையறாக் கோல விழிகளும் கொண்டெனை வென்றவளே,
கையறாச் சூலி, மத் தூர்மகி ஷாசுர மர்த்தனியே!

மீன்வென் றுலாவிய கண்களில் மோக அலைஉலாவ
தேன்வென் றுலாவிய செவ்வாய் இதழில், சிரிப்புலாவ,
கான்வென் றுலாவிய கூந்தலில் வாச மலர்உலாவ
நீவென் றுலாவும்மத் தூர்மகி ஷாசுர மர்த்தனியே.



# இராமபிரானின் ஒப்பற்ற அழகு

ஆ. சுப்பிரமணியம்


உலகில் இறைவனால் படைக்கப்பட்ட உயிரினங்களில் அழகான படைப்புகளைக் கண்டு களிக்கிறோம். இனவிருத்திக்கு அழகுக் கவர்ச்சி தேவைப்படுகிறதென்றாலும் அவையெல்லாம் அழியக் கூடியன. அழகு என்பது காண்பவர்கள் கண்ணில் கண்களில் உள்ளது என்ற பொருள்பட '' Beauty is in the eye of the beholder'' எனும் மேனாட்டு அறிஞனின் கூற்றை ஏற்றுக் கொண்டாலும் சிலருடைய உருவ அழகைப் பார்ப்பதில் அலுப்புத் தட்டி விடும். சிலருடைய உருவ அழகைப் பார்க்கப் பார்க்க ஆர்வமிகும். இராமபிரானின் ஒப்பற்ற அழகுக்கு ஈடு இணை இல்லையென்றே சொல்லலாம். இராமபிரானின் அழகை, முற்றும் துறந்த முனிவர், சாதாரண நிலையிலுள்ள, ஆண், பெண் குரங்கு நிலையிலுள்ள அனுமன், வாலி, அரக்க நிலையிலுள்ள சூர்ப்பணகை அனைவரும் அனுபவிக்கிறார்கள்.

தசரதனிடமிருந்து இராம, இலக்குவனர்களை அழைத்துச்செல்கிறார் விசுவாமித்திரர். ஒரு நாள் விடியற்காலையில் இருவரும் படுத்திருக்கும் நிலையில் அவர்கள் அழகைக் கண்ட முனிவர் தம்மை மறந்த நிலையில் இராமபிரானின் அழகை அனுபவிக்கிறார். இராமனை எழுப்பி அழைத்துக் கொண்டு செல்ல வேண்டிய முனிவர் 'கௌசல்யா சுப்ரஜா இராமா' என்று அழகான பிள்ளையைப் பெற்றெடுத்த கௌசல்யா தேவி என்ன நோன்பு நோற்றாளோ என்று விளிக்கிறார். இராம பிரானின் அழகு படுத்தும்பாடு இது. அடுத்து மிதிலை நகரிலே இராமபிரான் உலா வரும் காட்சியை மகளிர் காண்கின்றனர். இராமபிரானின் ஒவ்வொரு அங்க அவயங்களில்கண்களைப் பதித்தவர்கள் ;

''தோள் கண்டார் தோளே கண்டார்
  தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்
  தடக்கை கண்டாருமஃதே
வாள்கொண்ட கண்ணார் யாரே
  வடிவினை முடியக் கண்டார்
ஊழ் கொண்ட சமயத்து அன்னான்
  உருவு கண்டாரை ஒத்தார் ''

என்று கம்பர் பெருமான் நமக்குக் காட்டுகிறார். அடுத்ததாக கங்கை நதிக்கரையில் மாலை நேரத்தில் இராமர், சீதா, இலக்குவன் மூவரும் நடந்து செல்கிறார்கள். மாலைக் கதிரவன் ஒளி இராமபிரானின் திருமேனியில் படுகிறது. உலக நாயகனான இராம சோதியில் கதிரவனின்சோதி கலந்து அதுதன் ஒளி மழுங்கி விடுகிறது. இராமபிரானின் அழகை வர்ணிக்க எண்ணும் கவிஞர் 'மையோ' என்கிறார். கார் வண்ணமேனியின் பளபளப்பு மையில்இல்லை; அத்துடன் மை ஒரு சிமிழுக்குள் அடங்கி விடும். கார் வண்ணம் சிமிழுக்குள் அடங்காது என்பதாலும் மேலும் மை அழியுந் தன்மை உடையது என்பதாலும் 'மரகதமோ' என்கிறார், பின்னர் சிந்திக்கிறார். மரகதம் வன்மையானது. இராமபிரானின் உடல் மென்மையானது. மரகதம் செல்வந்தர் மாட்டு உண்டு. இராமபிரான் செல்வந்தர்க்கு மட்டுமின்றி வறியோர்க்கும் கருணைகாட்டும்வள்ளல். மரகதம் அழியக் கூடியது. இராமபிரான் அழியாத நித்தியவஸ்து. எனவே கவிஞருக்கு மனதிருப்தி இல்லாமல் 'மறிகடலோ' என்கிறார். கடலும் ஊழிகாலத்தில் அழியும். கடல் உப்பு நீரைக் கொண்டது. காகுத்தன்மேனி கற்கண்டை நிகர்த்தது . 'இராம' என்று நினைப்பவர் மனத்திலும் இனிக்கும் தன்மையன். 'சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியானை' என்றார் ஆண்டாள் அம்மையார். எனவே இதிலும் மனநிறைவு பெறாத கவிஞர் 'மழைமுகிலோ' என்கின்றார். பின்னும் சிந்திக்கிறார் கவிஞர். வேண்டும் காலத்தில் பெய்யாது வேண்டாத காலத்தில் மழை பெய்யும், இராமபிரான் வேண்டும் அன்பர்களுக்கு காலந்தாழ்த்தாது விரைந்து வழங்குபவன். எனவே கருணை வள்ளலாகிய இராமபிரானின் அழகை வர்ணிக்க முடியாமல் 'ஐயோ' என்று அலறுகிறார். இதோ தங்கத் தாளில் நவரத்தினங்களால் எழுதிப் போற்ற வேண்டிய கம்ப சித்திரம் ;

''வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதி
          யின் மறையப்
பொய்யோயெனும் இடையாளொடும்
          இளையானொடும் போனான்
மையோ! மரகதமோ! மறிகடலோ! மழை
          முகிலோ!
ஐயோ! இவன் வடிவென்பதோர் அழியா
          அழகுடையான்''



என்பார் கவிஞர். அடுத்ததாக ஆரண்யகாண்டத்தில் சூர்ப்பணகை இராமபிரானைச் சந்திக்கிறாள். இராமசௌந்திரியத்தில் மனதைப் பறிகொடுத்த அந்தக் காமவல்லி மூக்கறுபட்டு கரதூடணாதியர்கள் வதத்திற்குப் பின்னர் இராவணன் கால்களில் வீழ்ந்து முறையிடுகிறாள். ''நீ செய்த குற்றம் என்ன!'' என்று கேட்ட அண்ணனிடம் 'என்வயின்உற்ற குற்றம் யாவர்க்கும் எழுத ஒண்ணாத தன்மையன் இராமன்' என்று கூறுகிறாள். பின்னர் சீதைபால் காமுற்ற இராவணன் கற்பனையில் படைத்த சீதையைப்பார்த்து ''இவளா சீதை'' என்று தங்கையைப் பார்த்துக் கேட்க 'அந்தார் அகலத்தோடும் அஞ்சனக்குன்றமென்ன வந்தான் இவன் ஆகும் அவ்வல்வில் இராமன்' என்றாள். எனவே இராமபிரான் அழகு, அங்கங்கள் சிதைக்கப்பட்ட நிலையிலும் சூர்ப்பநகையை அந்தப் பாடுபடுத்துகிறது.

அடுத்து கிஷ்கிந்தா காண்டத்தில் முதன் முதலாக அனுமன் இராமபிரானைச் சந்திக்கிறான். இராமபிரானது தோளழகில் மனதைப் பறிகொடுத்ததாக வால்மீகி கூறுகிறார். ஆனால் கம்பர் இராமபிரானது கண்ணழகில் மயங்கியதாகப் பாடுகின்றார். இதோ பாடல்:

'மஞ்செனத் திரண்ட கோலமேனிய மகளிர்க்கெல்லாம்
நஞ்செனத் தகைய வாகிநளிர் இரும்பனிக்குத் தேம்பாக
கஞ்சமொத்தலர்ந்த கண்ண' என்று அனுமன் பேசுகிறான்.

மார்பில் பாய்ந்த இராமபாணத்தைக் கையால் பற்றிக்கொண்டு உயிரோடு போராடிக் கொண்டிருக்கிறான் வாலி. அம்பில் பொறிக்கப்பட்ட இராம மந்திரத்தைக் கண்களில் கண்டான். பின்னர் தன்னெதிரேதோன்றிய இராமபிரானைக் காண்கிறான். இராமபிரானது அழகினைக் கண்ட வாலியின் கண்கள் ஆச்சரியத்தால் பரவசமடைகின்றன. அந்த அழகை அனுபவித்த வாலி இராமபிரானை விளிக்கிறான். 'ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்' என்று. ஆம் இராமபிரானது உருவத் திருமேனியின் அழகை ஓவியத்திலும் வரைவதற்கு அடங்காது. அது மட்டுமல்ல, முடியவும் முடியாது என்பது வாலியின் கணிப்பு.

இவ்வாறு பல சான்றுகள் கூறலாமாயினும் இறுதியாக ஒன்று கூறி அமைகிறேன். அசோக வனத்தில் சீதாதேவி தனிமையிலிருந்து இராமபிரானை எண்ணி எண்ணிப் புலம்புகிறார். சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை ஒத்திருக்கும்முகத்தினை எண்ணி ஏங்குகிறாள். 'அருத்தி வேதியர்க்கு ஆன்குல மீந்தவர் கருத்தின் ஆசை கரையின்மை கண்ட இராமபிரானின் சிரிப்பை நினைந்து அழுகின்றாள். அனுமனைச் சந்தித்த பின்னர் இராமபிரானது அழகு எப்படிப் பட்டது என்று அனுமனிடம் கேட்கிறாள். அனுமன் சொல்கிறான் 'தாயே! அப்பெருமானின் அழகை வர்ணிக்கமுடியுமோ! இருப்பினும் நான் அனுபவித்ததைச் சொல்கிறேன். என்று இருபத்தொரு பாடல்களில் கூறுகிறான். 'அண்ணல் தன் திருமுகம் கமலமாம் எனில் கண்ணினுக்குவமை வேறு யாது காட்டுவேன்' என்றும், எம்பெருமான் திருமுகத்தைச் சந்திரனுக்கு ஒப்பிடலாம்...ஆனால் சந்திரன் களங்கமுற்றது, வளர்ந்து தேய்வது: எம்பெருமான் திருமுக மண்டலமோ களங்கமில்லாதது என்றும், என்றும் ஒரேமாதிரிஒளியுடையதுஎன்றும் வர்ணித்துக்கொண்டே போகிறான். ஆகவே எல்லையில் பெருங்குணத்து இராமன் தாளினை வணங்கும் இராமனடியார்களாகிய நாம் இராமாயணக்கடலில் மூழ்கி இராமபிரானின் ஒப்பற்ற அழகை அனுபவிப்போமாக.

# மங்களாசாசனம்

பேராசிரியர் டாக்டர் தெ. ஞானசுந்தரம்
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

**பல்லாண்டு இசைத்தல்**

மங்களாசாசனம் வைணவ மரபின் தலையாய கொள்கையாகும். இதற்குப் பல்லாண்டு பாடுதல் என்று பொருள். ஒவ்வொரு வைணவரும் அன்றாடம் செய்ய வேண்டிய கடமைகள் சிலவற்றுள் ஒன்றாக இதனையும் குறிப்பிட்டுள்ளார் பிள்ளை லோகாசாரியர். இத்தகைய தலைமையும், சிறப்பும் நிறைந்தது மங்களாசாசனம்.

**இரண்டு நிலைகள்**

சேதனனுக்கு இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று அறிவு நிலை, மற்றொன்று அன்பு நிலை. அறிவுநிலையில் உள்ளதை உள்ளவாறு அறிகிறான். அன்பு நிலையில் உணர்வின் வழி நிற்கிறான். ஆதலின் உள்ளதை உள்ளவாறு உணர்வதில்லை. அறிவுநிலை, தெளிந்தநிலை, அன்பு நிலை கலங்கிய நிலை.

**அறிவு நிலை**

பெருமான் முற்றுணர்வும் (சர்வக்ஞத்வம்) முடிவில் ஆற்றலும் (சர்வசக்தித்வம்) உடையவன் என்பதையும், குறையொன்றுமில்லாத நிறைவாளன் என்பதையும் அறிந்து, அவனை உயிர்க்கெல்லாம் நாயகனாகத் தெளிவது அறிவுநிலை. சுருங்கச் சொல்லின், இது பிரணவத்தின் பொருளை உணரும் நிலை. இந்நிலையில் அகாரத்தால் கட்டப்படும் பெருமானுக்கு மகாரத்தால் கட்டப்படும் தான் அடிமை என்றும், தனக்கு அவன் பாதுகாப்பாளன் என்றும், தான் அவனால் காக்கப்படுவோன் என்றும் சேதனன் உணர்கிறான். இத்தெளிவினால் தன் இருப்பும் தழைப்பும் அவனாலே எனத் துணிகிறான். தான் விழையும் நலன்களைப் பெற அவனை நாடி நிற்கிறான். மாமுனிவர்களெல்லாம் பெரும்பாலும் இந்நிலையிலேயே நின்றுள்ளனர். இந்நிலையினை பக்தியின் தொடக்கம் எனலாம்.

**அன்பு நிலை**

பெருமான் பேரழகும் (சௌந்தர்யம்) மேன்மையும் (சௌகுமார்யம்) உடையவன். ஆடவரெல்லாம் பெண்ணாகப் பிறந்திருக்கக் கூடாதா என ஏங்கும்படி இருக்கிறது அவன் பேரழகு. அவன் மென்மையோ பேசப் பிசகும் படியாய் உள்ளது. பக்தி முதிர்ந்த சேதனன் இந்த பேரழகினையும் மென்மையினையும் நினைக்கும்பொழுது இவற்றிற்குக் கண்ணேறு பட்டுவிடுமோ எனக் கலங்குகிறான். ஊறு நேர்ந்து விடுமோ என உள்ளம் மறுகுகிறான். இக்கலக்கமும் அச்சமும் அவனைத் தன்நிலை மறக்கச் செய்கின்றன. தான் பெருமானால் பாதுகாக்கப்படும் அடிமை என்பதை மறக்கிறான். அவனிடமிருந்து தான் நலன்களைப் பெறவேண்டும் என்பதை மறக்கிறான். அவன் பரிவுபெருக்கெடுக்கின்றது. இறைவனுக்குப் பாதுகாப்பாகத் தன்னை நினைக்கிறான். பெருமானைக் குழைச்சரக்காக எண்ணுகிறான். அவன் அழகும் மென்மையும் நிலையாகச் செல்ல வேண்டுமென வாழ்த்துகிறான்; பல்லாண்டு பரிந்து பாடுகிறான். இது அன்பின் வயப்பட்டநிலை. ஆழ்வார்களெல்லாம் இந்நிலையில் நின்றவர்கள். இதனைப் பக்தியின் எல்லை என்னலாம். பக்தி முதிர்ந்த அன்பு நிலையில்தான் மங்களாசாசனம் பிறக்கின்றது.

**மேலோர் ஒழுக்கம்**

இப்படி அறிவு கலங்கிப் பல்லாண்டு பாடுவது புதிய ஒன்றன்று, மேலோர் வாழ்வில் காணும் முடிபேயாகும். இரவு பகல் வேறுபாடில்லாமல் சக்ரவர்த்தி திருமகன் தேவர்களைப் பாதுகாத்து வந்தான். அவனுடைய வடிவழகு முதலிய குணங்களைக் கண்ட அயோத்தி மக்கள் அவன் பரம்பொருள் என்பதை மறந்து, அவனால் தங்களுக்கு வரும் நலன்களை மறந்து, அவன் குணங்களுக்குப் பாதுகாப்பாக, அவனுக்குக் கீழ்ப்பட்ட தேவர்களின் காலிலே விழுந்தார்கள். இவ்வறிவுக் கேட்டிற்குக் காரணம் அன்பே.

கற்பின் கனலியைக் காகுத்தன் மணந்து அயோத்தி திரும்பிக் கொண்டிருந்தான். தசரதன் இராமபிரானின் ஆற்றலை நன்குணர்ந்தவன்; பெருமான் தாடகையை அழித்ததை அறிந்தவன். எனினும் பரசுராமனைக் கண்டபொழுது அஞ்சினான். அவன் பால் சரண் புகுந்து மயங்கினான். 'பரசுராமன் தோற்று மீண்டு போனான்' எனக் கேட்ட பின்பே தெளிவடைந்தான். தானும் தன் மக்களும் மறு

பிறவி எடுத்ததாகக் கருதினான். பெருமான் ஆற்றலை உணர்ந்த தசரதன் கலக்கத்திற்கும் அன்பே காரணமாகும். இத்தகைய கலக்கத்தை விசுவாமித்திரன், தண்டகாரண்ய முனிவர்கள், திருவடி, சுக்ரீவன் முதலியோர் பக்கலிலும் உலக வழக்கிலும் காணலாம்.

**சொருபத்திற்குச் சேருமா ?**

மங்களாசாசனத்தில் 'எம்பெருமான் பாதுகாவலன். சேதனன் பாதுகாக்கப்படுபவன்' என்ற உணர்ச்சி (பாவம்) மாறாடிக் கிடக்கின்றது. இத்தகைய மாறாட்டத்தை விளக்கும் அறிவுக்கேடு சேதனின் இயற்கைத் தன்மைக்கும் பொருந்துமோ' என்ற ஐயம் எழும். சேதனனுக்கு ஏற்பட்ட இக்கலக்கத்திற்குக் காரணம் வினை (கர்மம்) அன்று. பரம்பொருளின் பெருஞ்சிறப்பே காரணம். பரம்பொருளின் சிறப்புக்கள் இருக்கும்வரை இக்கலக்கமும் இருந்து வரும். வினையின் காரணமாக வருகின்ற அறிவுக்கேடே தள்ளத்தக்கது. பொருட் சிறப்புக் காரணமாகவருவது தள்ளத் தக்கதன்று; கொள்ளத்தக்கதே. மேலும் நாயகனுக்கு வியப்பை விளைப்பதே தொண்டனுக்கு இயல்பாகும் (சொரூபம்) என்பதைக் கருத்திற்கொண்டால் மங்களாசாசனம் பண்ணுகையே உயிரின் கடமை என்பது புலப்படும்.

**பெரியாழ்வார்**

ஆழ்வார்களில் பெரியாழ்வாருக்குத் தனியான ஏற்றமுண்டு. மற்றைய ஆழ்வார்கள் ஏதேனும் ஒரு காலத்தில் பல்லாண்டு பாடி அமைந்தனர். ஆனால் பட்டர்பிரானோ காலமெல்லாம் கலக்கமெய்திப் பல்லாண்டு பாடிக் கொண்டே இருந்தார். மற்றவர்கள் அவன் பேரழகில் சிந்தையைப்பறி கொடுத்தனர். அதில் ஆழங்காற்பட்டனர். ஆனால் பெரியாழ்வாரோ அப்பேரழகில் தரித்து நின்று அதற்கென வருகிறதோ என்று பல்லாண்டு பாடினார். அவனுக்குப் பல்லாண்டு பாடியதோடு அவன் அடியார்கட்கும் பல்லாண்டு பாடினார். மற்றவர்க்கிருந்ததெல்லாம் பரிவு. இவர்க்கிருந்ததோ பொங்கும் பரிவு. அதனாற்றான் பெரியாழ்வார் என்னும் விழுமிய பெயர் பெற்றார். வில்லிபுத்தூர் விட்டுசித்தர், பெருமான் தான் பரம்பொருள் என்பதை வேண்டிய வேதங்கள் ஓதி விளக்கியபொழுது 'பட்டர் பிரான்' ஆனார். அவன் தலைவன், தான் அடிமை என்பதை மறந்து, அவனுக்கு என்ன ஊறுவருமோ எனக் கலங்கி, அவன் நலன் குறித்துப் பல்லாண்டு பாடியபொழுது பெரியாழ்வாரானார். இந்த அடைவினை மனத்திற் கொண்டே 'பட்டர்பிரான் பெற்றான் பெரியாழ்வார் என்னும் பெயர்' என மணவாள மாமுனிகள் அருளிச் செய்துள்ளார்.

மங்களாசாசனம் பேரன்பின் விளைவு என்பதும், அது பெரியோர் வாழ்வின் முடிபு என்பதும், அஃது உயிரின்இயல்புக்குப் பொருந்தியது என்பதும், ஓவாது மங்களாசாசனம் பண்ணி நின்றமையாலேயே விட்டுசித்தர் 'பெரியாழ்வார்' என்ற பெயர் பெற்றார் என்பதும் இக்கட்டுரையால் தெளிவாக விளங்கும்.

## இறைவனைப் பாடாத நாள் பட்டினி நாள்!

கண்ணா நான்முகனைப் படைத் தோனே !
காரணா கரியாய் அடியேன் நான்
உண்ணா நாள்பசிஆவது ஒன்று இல்லை
ஓவாதே நமோ நாரணா என்று
எண்ணா நாளும் இருக்கு எசுர்சாம
வேத நாள்மலர் கொண்டு உன்பாதம்
நண்ணாநாள் அவை தத்துறு மாகில்
அன்றெனக்கு அவை பட்டினி நாளே.

—பெரியாழ்வார்.

# வினைப்பாசம் அற முயன்ற திருக்குறிப்புத் தொண்டர்

**சா. சரவணன், எம்.ஏ.**
*சைவ சித்தாந்தத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்*

இறைவன் ஆன்மாவின் அழுக்காகிய ஆணவம் நீக்கமடைய மேலும் இரண்டு அழுக்குகளாகியமாயை, கன்மம் ஆகியவற்றைத் தந்து செயல்படுத்துகிறான். செயல்படுத்த ஆன்மா செயல்படும் சீர்மையில் ஆணவ அழுக்கு நீக்கம் பெறும் என்று சாத்திரம் உரைக்கிறது.

செயல்படுத்தித்தான் இறைவனால் அழுக்கை நீக்க முடியும், செயல்பட கூடுதலாக இரண்டு அழுக்குக்கள் தேவை. பிறருக்காகத் தாமே செயல்பட்டுஅழுக்கு இல்லாமல் அழுக்கு நீக்குபவர்கள் திருத்தொண்டர்கள். இவர்கள் அழுக்கு நீக்க அழுக்கைப் பயன்படுத்தாமல் தாம் தூயவராய் நின்று விளங்கி தூய்மை விளக்குபவர்கள். அத்தன்மை தொண்டு ஒன்றிற்கே வாய்க்கும். திருக்குறிப்புத் தொண்டரை,

'துரிசு இல் திருக்குறிப்புத் தொண்டர்'

என்று திருத்தொண்டர் திருநாமக் கோவையுள் சிவஞான முனிவர் கூறுகின்றார். 'துரிசுஇல்' என்பதன் மூலம் மூவகைக் கருத்தை உடன் கொள்ள முடிகிறது.

1. துரிசு இல்லாத திருக்குறிப்புத் தொண்டர்
2. துரிசு இல்லையாகச் செய்யும் திருக்குறிப்புத் தொண்டர்
3. துரிசு இல்லையாகச் செய்யும் திருக் குறிப்புக்காகத் தொண்டராய் நின்றவர்.

துரிசு இன்மையும் இல்லையாகச் செய்தலும் உலகக் குறிப்பின் வழியோ உயிர்க் குறிப்பின் வழியோ அன்று, இறைக் குறிப்பின் வழியே. இறைக் குறிப்பு என்பது ஆன்மாக்களின் மலம் நீங்கச் செய்தல், அதற்காகவே தொண்டு செய்து நின்ற குறிப்பினர் திருக்குறிப்புத் தொண்டர்.

**குறித்தபொழுது பாசம் அறவந்த திருத்தொண்டர்**

'மண்டும் புனல் சடையான் தமர் தூசு
எற்றி வாட்டும் வகை
விண்டு மழைமுகில் வீடாதொழியின் யான்
வீவன் என்னா
மீண்டும் படர்பாறை முட்டும்எழிலார்
திருக்குறிப்புத்
தொண்டன் குலம் கச்சி ஏகாலியர் தங்கள்
தொல்குலமே'

என்று திருத்தொண்டர் திருவந்தாதி (21)யும்

'கொந்தலர்பூம் பொழில்கச்சி நகர் ஏகாலிக்
குலத்தலைவர் தவர்குறிப்புக் குறித்து
ளார்பால்
வந்திறைவர் நமக்கின்று தாரீ ராகின்
வருந்தும் உடல் எனவாங்கி மாசுநீத்த
கந்தைபுல ராதொழிய மழையும் மாலைக்
கடும் பொழுதும் வரக்கண்டு கலங்கிக்
கல்மேல்
சிந்தைமுடி புடைப்பளவில் திருஏகம்பர்
திருக்கைகொடு பிடித்துயர்வான் சேர்த்தி
னாரே''

என்று திருத்தொண்டர் புராண சார (22)மும் திருக்குறிப்புத்தொண்டர் வரலாற்றினை, ஏகாலியர் குலத்தில் பிறந்து அடியார் ஆடை துவைத்துக்கொடுக்கும் தொண்டில் சிறந்து இறைவன் வந்து அளித்த ஆடையின் அழுக்கை குறித்த காலத்தில் நீக்கித்தர முடியவில்லை என வருந்தி கல்லில் மோதி உயிர்விடத் துணிந்தவர் எனக்கூறிப் பாராட்டுகின்றன.

திருக்குறிப்புத்தொண்டர் வரலாற்றை விவரிக்கும் சேக்கிழார் முதலில் தொண்டை நாடு பற்றியும் அதனுள் காஞ்சி நகரின் மேன்மைகுறித்தும் பாடியமைக்கிறார். காஞ்சிப் பதியில் உமையம்மை அறம் வளர்த்து அறம் நிலைக்க வைத்தாள் என்பதுடன் இறைவனிடம் அறத்திற்கு வேறு செய்தானையும் மன்னிக்க வேண்டும் என்ற கொள்கையையும் இறைவி நிலை நாட்டினாள் என்பதை,

'ஈறு இலாத இப்பதியினுள் எல்லா
அறமும் யான் செய அருள் செய்யவேண்டும்
வேறுசெய்வினை திருவடிப் பிழைத்தல்
ஒழிய இங்கு உளார் வேண்டின செயினும்

பேறு மாதவப் பயன் கொடுத்தருளப்
பெறவும் வேண்டும் என்றனள் பிறப்பு
ஒழிப்பாள்'

என்று சேக்கிழார் எடுத்துக் கூறுகின்றார்.

அறம் வளர்த்த இறைவியைப் 'பிறப்பு ஒழிப்பாள்' என்றார். அவள் அறத்திற்குவேறு செய்த உயிரையும் மன்னித்தருள வேண்டும் என்று கேட்கின்றாள். திருவடிப் பிழை தவிர எந்தப் பிழையையும் மன்னிக்கும் தன்மை இறைவியால் நாட்டப் பெறுகிறது.

திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றில் திருவடிப்பிழை நிகழ்ந்ததாக வரலாறு இல்லை. அவ்வாறாயின் அவர் செய்தது எப்பிழை? பிழையாயினும் அது எப்படி தவறாகும்? திருவடிப் பிழை தவிர பிற பிழை பொறுக்கப் பெறலன்றோ கொள்கை.

தொண்டர் தாம் செய்பணியில் தவறினோம் எனத் தானே கருதுகிறார். அதற்காகத் தலையை மோதிக் கொள்கிறார். தொண்டரின் செயலில் எது இடர் என்பதை இறைவன் கூற்றாக,

'கந்தை இது ஒலித்து உணக்கிக்
கடிது இன்றே தாரீரேல்
இந்த உடற்கு இடர் செய்தீர்' (1202)

என்று சேக்கிழார் அமைத்துக் காட்டுவாராயினர். இதில் 'இடர்' என்பதாகக் கருதப் பட்டது 'காலம்' ஒன்றே. இன்றே காலத்தில் வெளுத்துத் தரவேண்டும் என்று கூறியதன் மூலம் அதனை அறியலாம். திருத்தொண்டரும்

'குறித்த பொழுதே ஒலித்துக்
கொடுப்பதற்குக் கொடுபோந்து' (1203)

என்று சேக்கிழார் காட்டுமாறு செயல் மேற் கொள்கின்றார்.

ஆடையில் அழுக்கை நீக்குவது என்பது குறித்த காலத்தில் அமைதல் வேண்டும் என்பது மட்டுமே இடர். இறைவனாலும் இறைவியாலும் இயலாத செயலாகவும் அது அமைந்து விட்டது. இறைவன் அழுக்கேறிய கந்தை ஆடையினன். இறைவி 'பிறவி' அறுப்பாள்'. ஆனால் அறம் வளர்க்கிறாள். உலக ஆன்மாக்களின் அழுக்கைக் குறித்த காலத்தில் நீக்க அவர்களால் முடியாமல் தொண்டரைக் கொண்டு முடிக்க எண்ணுகின்றார்கள். அதற்காக உலக ஆன்மாக்களின் செயல்களுக்கு விதித் தளர்வுகள் தருகின்றனர். அவ்வாறு அமைந்ததே திருவடிப் பிழை தவிர பிறபிழை மன்னிக்கப்படும் என்பது. இதை அடியவர்கள் எடுத்துக் கொண்டு செயலாற்றும் நிலையில் இறைக் குறிப்பில் நின்று தொண்டு மேற்கொண்டவர் திருக்குறிப்புத் தொண்டர். இத்தன்மையை,

'திருக்குறிப்புத் தொண்டர் வினைப் பாசம்
அற முயன்றவர்'' (1082)

என்று சேக்கிழார் பாராட்டினார்.

**குறிப்பறியும் திறம்**

குறிப்பறிதல் என்பது ஒருகொள்கை. இக் கொள்கையினைத் திருவள்ளுவர் மூலம் பத்து வகை அமைப்பாக பத்துக் குறள் மூலம் உணர முடிகிறது. ஐவகை அமைப்பு இணைப்பு விளக்கமாகவும், ஐவகை அமைப்பு செயல் இணைப்பு விளக்கமாகவும் காணப் பெறுகிறது.

கூறாமை நோக்கிக் குறிப்பறிதல், அகத்தது உணர்தல், குறிப்பில் குறிப்பு உணர்தல், குறித்தது கூறாமைக் கொள்ளுதல், குறிப்பில் குறிப்பு உணர்ந்து கண்ணுதல் (பொருந்தல்) ஆகிய முதலில் கூறப்பெற்ற ஐந்தும் இருப்பு இணைப்பு விளக்கங்களாக அமைந்தன.

பின் கூறப்பட்ட காட்டுதல், முந்துறுதல், நிற்றல், வகைமை பெறல், நுண்மை ஆகிய ஐந்தும் செயல் இணைப்பு விளக்கங்களாக அமைந்தன.

திருவள்ளுவர் கொள்கை நெறிப்படி முதலில் இருப்பும் பின்னர்ச் செயலும் அமைத்தார். திருக்குறிப்புத் தொண்டர் வாழ்க்கை நெறிப்படி முதலில் செயலும் பின்னர் இருப்பும் விளக்கம் பெற சேக்கிழார் அமைத்துக் காட்டியமையைப் பின்வருமாறு அறியலாம்.

**வழித்தொண்டர்**

வழித்தொண்டு என்பது ஏற்று நிற்கும் கொள்கை வழிச் செயல் மேற்கொள்வது. திருக் குறிப்பாய இறைக்கொள்கை வழி தொண்டு மேற்கொண்டாராதலால் திருக்குறிப்புத் தொண்டரை

'மை விரவு கண்டர் அடி
வழித்தொண்டர்உளரானார்'

என்று அருள் வழித்தொண்டராக நின்றார் என்பதாகச் சேக்கிழார் தெளிவுபடுத்துகின்றார். இறைக்குறிப்பில் செயலொழுகும் நிலையை மேற்கொண்ட திருக்குறிப்புத் தொண்டரின் அமைப்பில் செயல் இணைப்பு விளக்கங்களைப் பின்வருமாறு உணரலாம்.

(1). **காட்டுதல்** : அடுத்தது காட்டும் பளிங்கு போல நெஞ்சங் காட்ட வேண்டும். இறைவன் குறிப்பாகக் காட்ட வேண்டியது அன்புடை மனத்தை, அந்நிலை ஒழுக்கத்து விளங்கி நின்றார் திருக்குறிப்புத் தொண்டராதலால் 'செவ்விய அன்புடை மனத்தார்' (173) என்கிறார் சேக்கிழார்.

(2) **முந்துறுதல்**; உள்விளங்குதலை முந்தி நின்று காட்டுவது முகம். முந்துதல் என்பது தொன்மையாய் உள்அடங்கியதை முன்னின்று விளக்குதல் ஆகும். முந்தியது தொன்மை

யாகிய அத்தன்மையாய் தொன்மையாக நின்ற இறையின் கருணை நெறி முன்னின்று விளக்க முற ஒழுகியவர் திருக்குறிப்புத் தொண்டர் என் பதைச் சேக்கிழார் 'சீலத்தின் நெறி நின்றார்' (1193) என்று காட்டுவராயினார்.

(3) நிற்றல் : நம் தன்மை இன்னது என் பதை, அகம் நோக்கிக் குறிப்பறியும் ஒருவர் முன் நின்றாலே அவர் அறிவார். இது நிற்குந் தன்மையே நாட்டும் கொள்கை யாதலாக நிற்றல் என்பது. இறைக் குறிப்பில் நாம் நிற்றல் வேண்டும். நாம் நிற்றல் என்பது மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாலும் ஒரு நெறி விளங்க நிற்றலாகும். அங்கண் திருக்குறிப்பில் நிற்றலைக் கொண்டார் திருக் குறிப்புத் தொண்டராதலால்

'மண்ணின் மிசை வந்ததன்பின்
மனம் முதலாயின மூன்றும்
அண்ணலார் சேவடியின்
சார்வு ஆக அணைவிப்பார்'' (1194)

என்று சேக்கிழார் பாராட்டினார்.

(2) **வகைமைபெறல்:** பகைமை, கேண்மை பொருந்தி அறிந்து அதற்கேற்ப ஆற்றும் பணியும் குறிப்பறிதலே. இறையின் நடு நீர்மையில் நின்றொழுகும் திருக்குறிப்பால் அறிந்து போற்றினார் என்று

'புண்ணியமெய்த் தொண்டர் திருக்குறிப்பு
அறிந்து போற்றும் நிலை'' (1294)

என்றவாறு சேக்கிழார் பாராட்டினார்.

(5) **நுண்மை :** நுண்மை என்பதைக் காண்பதில் சிறந்தது 'கண்' என்றார் வள்ளுவர். நுண்மையைக் காட்டும் கண் என்பது 'பொருந் திய தன்மையால் அமைந்த வன்மைத் தன்மை யில் சிறந்து நிற்றல் என்பது. திருக்குறிப்பு ஒழுகிய திருக்குறிப்புத் தொண்டர் அறிந்தும் போற்றியும் நின்று பொருந்திய தன்மையில் அமைந்த வன்மையை உணர்ந்த சேக்கிழார் 'திண்மை' என்று கூறி வியந்த நிலையினை

'திண்மையினால் திருக்குறிப்புத்
தொண்டர் எனுஞ்சிறப்பினார்' (1194)

என்றவாறு அறியலாம்.

மேற்கண்ட ஐவகை அமைப்பில் உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக் காட்சியராய் ஒழுகி நின்ற தன்மையால் திருக்குறிப்புத் தொண்டர் ''வழித் தொண்டர்'' எனப் பெற்றார்.

**அகமார்க்க அன்பர்**

வழித்தொண்டராய் வெளிப்பட நின்ற மெய்ம்மை நிலையால் செம்மையுள் நிற்றலாய இருப்பை அகமார்க்க நிலையாற் பெற்றார் திருக்குறிப்புத் தொண்டர்என்பதை

'கல்வில் கமரில் கதிர்வானில் சாணையினில்
வல்லுப்பலகைதனில் வாதனையைச்சொல்லும்
அகமார்க்கத் தால்அவர்கள் மாற்றினர்காண் ஐயா
சகமார்க்கத் தால் அன்றே தான்' (50)

என்று உரைக்கும் திருக்களிற்றுப் படியார் என்ற சாத்திர நூல்வழி உணரலாம். அக மார்க்கத்தால் குறிப்பறிதல் ஒழுகி வழித் தொண்டராய் நின்றவர் செம்மையுள் நின்ற இருப்பு இணைப்பு நிலை அமைப்பை பின்வரும் ஐவகையான் அறியலலாம்.

(1) **கூறாமை நோக்கிக் குறிப்பறிதல்:** கூறாமை நோக்கிக் குறிப்பறிதலைக் கொண்டு மாறுபாடில்லாத அழகில் விளங்கலாம் என்பது வள்ளுவர் கருத்து. திருக்குறிப்புத் தொண்டர் கூறாமல் குறிப்புள் நிற்கிறார். அந்தச் செய லால் இறைவன் பேர் ஒலிப்பதாக நிற்கும் ஒலி இருப்பு விளங்குகின்றது என்று கருதுகிறார் சேக்கிழார் எனபதை,

''தேர் ஒலிக்க மாஒலிக்கத்
திசைஒலிக்கும் புகழ்க் காஞ்சி
ஊர் ஒலிக்கும் பெருவண்ணார்
என ஒண்ணா உண்மையினார்
நீர்ஒலிக்க அரா இரைக்க
நிலா முகிழ்க்கும் திருமுடியார்
பேர் ஒலிக்க உருகுமவர்க்கு ஒலிப்பர்
பெரு விருப்பினொடும்'' (1195)

என்று கூறுவதன் மூலம் அறியலாம். பெரு விருப்பு எனப்பெறும் நிலையில் பேர் ஒலிக்க குறிப்பொழுகிய திருத்தொண்டர் விருப்பாந் தன்மையை வெளிப்படுத்தி பெரிய இருப்பில் இணைந்து நின்றார். எல்லாம் ஒலிக்கத்தான் கூறாது அழுக்கு நீக்கும் பெரு விருப்பப்பணி யில் மாறுபாடு இன்றி நின்ற பொலிவில் பெரிய இருப்பாய இறை இருப்பை இணைத்து பேர் ஒலிக்கச் செய்யும் செம்மையுள் நின்றார் திருக் குறிப்புத் தொண்டர்.

(2) **அகத்தது உணர்தல் :** ஐயமில்லாமை உடைய அகத்தது உணர்தல்; உணர்ந்தால் தெய்வத்தோடு ஒப்ப ஆவர். இறைவன் குறிப்புணர்ந்த திருக்குறிப்புத் தொண்டர் அதற்காகத் 'தான்' செய்கிறார்.

'தூசு உடைய துகள் மாசு
கழிப்பார் போல், தொல்லை வினை
ஆசு உடைய மலம் மூன்றும்
அணைய வரும் பெரும் பிறவி
மாசுதனை விடக் கழித்துவரும்
நாளில்'' (1196)

என்று சேக்கிழார் கூறுவதன் மூலம் இறைவன் பணியையே அறிந்து அதற்காகப் பணியாற்றிய நிலையில் செம்பொருள் அனைய இருப்பில் திகழ்ந்தார் திருக்குறிப்புத் தொண்டர் என் பதை உணரலாம்.

(3) **குறிப்பில் குறிப்பு உணர்தல் :** குறிப்பில் குறிப்புணர்வார் என்பது குறித்த குறிப்பில் குறிப்பு உணர்தல், குறிப்பில் குறிப்பு

உணர்தல் என்பதன்று. குறிக்கப்பட்ட குறிப்பில்—குறித்த செய்தியின் குறிப்பு' என்ன என்று உணர்தல். குறிப்பை நோக்கமாகக் கொண்ட குறிப்பறியுமாறு விளக்கிக் கொண்டு உள்நின்ற அமைப்பே குறிப்பு. குறிப்பறிதலை அதுவே செய்யாது. குறிப்பை அது வெளிப்படுத்த நாம் அறிகிறோம். அவ்வாறு அது வெளிப்படுத்த உள்நின்ற அமைப்பே குறிப்பில் குறிப்பு. எனவே குறிப்பினால் அறியப்படும் வெற்றுச் செய்தி மட்டுமே குறிப்பில் குறிப்பு ஆகாது. வெளிப்பட்ட குறிப்புக்குக் காரணமாக உள்நின்ற குறிப்பை உணர்தலே குறிப்பில் குறிப்பு உணர்தல்.

இறைவன் அழுக்கு நீங்க குறித்த செய்தியில் குறிப்பு அருள் என்பதாகும். அருள் குறிப்பாக நிற்க அதன் வெளிப்பாடாக அழுக்கு நீக்குந் தன்மை அறியப்படுகிறது. அழுக்கு நீக்கும் குறிப்பை அறிதலில் அறியப்பட்ட குறிப்பு அருளே காரணம் என்பது.

'தன்னுடைய அடியவர் தம்
தனித்தொண்டர் தம்முடைய
அந்நிலைமை கண்டு அன்பர்க்கு
அருள்புரிவான் வந்து அணைவான்'

என்று சேக்கிழார் சுட்டுவதன் மூலம் அருள் புரிவான் அன்பர்க்காக வருகிறான் என்பதைத் தெரியலாம். அருள் என்பதைத் தெளிவுபெற நிறுத்தி, அதன் இருப்பில் நின்று பேணுந் திருத்தொண்டின் செம்மையில் குறிப்பில் குறிப்பாய அருள் இணைப்பின் வலிமையை உலகும் உணருமாறு காட்ட இறைவன் வருகிறான் என்றார்.

*(4)* குறித்தது கூறாமைக் கொள்ளுதல் : குறித்தது கூறாமலே கொள்ளவல்ல ஒருவர் வேடத்தால், நம்மைப் போல ஒப்பாக இருப்பினும் வேற்றுமை உடையவரே. அவருக்காகத் தனியாகத் 'தாங்கி' உண்டு உயர்ந்த குறிப்பை குறித்த அருள்தன்மையால் குறித்தது கூறாமலே கொண்டார்க்கு இறைவன் சிலவற்றைத் தாங்குகின்றான். அவன் அவ்வாறு தாங்கித் தரும் இருப்பு இணைப்பு குறித்தது கூறாமைக் கொண்டார் தனித் திறம் நோக்கி மட்டுமே யாகும். எனவேதான் திருக்குறிப்புத் தொண்டர் பால்

'மாதவ வேடம் தாங்கி' *(1198)*

இறைவன் வருகின்றான் என்றார் சேக்கிழார்.

*(5)* குறிப்பில் குறிப்புணர்ந்து கண்ணுதல்: குறிப்பில் குறிப்பு உணர்தலும் பொருந்தலும் ஆய இயைபு வேண்டும் என்பதைக் குறிப்பில் குறிப்புணருங்கண் வேண்டும் என்பதாகக் குறள் காட்டிற்று. உணர்ந்து பொருந்தலே செம்மையுள் நிற்றலின் பயனாம். ஞானமும், இன்ப அனுபவமாகவும் அமைந்து நிறைவைத் தரும். குறிப்பில் குறிப்பாய இறைவனைப் பொருந்திட நிற்றலை,

---

## பழகத் தெரிந்துகோள் பாரதப் பெண்ணே!

**எந்த ஆணுடனும்**
**உன்னுடைய தந்தையாயினும்,**
**சகோதரன் ஆயினும் சரி,**
**நெருங்கிய தொடர்பு கொள்ளாதே.**
**பின் பிறரைப் பற்றி உரைப்பான் ஏன் ?**
**கடவுளே மனித உருவில்**
**உன்னிடம் வந்தாலும் கூட,**
**அவருடன் நீ நெருங்கிப் பழகுதல்**
**கூடாது.**

**—ஸ்ரீ சாரதா தேவியார்.**

---

'வரும் மேனி அருந்தவரைக்
கண்டு மனம் மகிழ்ந்து எதிர்கொண்டு
உருமேவும் மயிர்ப்புளகம்
உள ஆகம் பணிந்து எழுந்தார்,' *(1199)*
'எய்தும் அவர் குறிப்பு அறிந்தே' *(1200)*

என்று சேக்கிழார் பாராட்டுகின்றார். இறைவன் குறிப்பை ஆன்மா அறிந்து, 'மேனி அருந்தவமாய அருளைக்கண்டு மனத்தால் மகிழ்தலும் வாக்கால் எதிர் கொண்டழைத்தலும் உடலாற் பணிந்து எழுதலும் கொண்டு இறை அனுபவத்தில் பொருந்திய இருப்பில் நின்றார் திருக்குறிப்புத் தொண்டர் என்பதை அறியலாம்.

செம்மை ஒழுக்கம்:

தொண்டு பெற்ற அடியவர் ஒருவர் விறன் மிண்டர். தொண்டும் குறிப்பும் என நின்றவர் திருக்குறிப்புத் தொண்டர். தொண்டின் தலைமையால் தொண்டாற்றும் தகைமையால் செம்மையாம் ஒழுக்கம் பெற்றார் திருக்குறிப்பு தொண்டர், ஆதலால்—

'வந்து எழுந்து பிடித்தது—அணி
வளைத் தழும்பர் மலர்ச் செங்கை' *(1207)*

என்று கூறினார் சேக்கிழார். கல்லில் மோதிய தலையைத் தடுத்து நிறுத்தியது செங்கை என்பது. மெய்ம்மை வழித்தொண்டு செய்து செம்மையுள் நிற்றலைப் பெற்றார் திருக்குறிப்புத் தொண்டர் என அவர் வரலாற்றினை சேக்கிழார் மூலமும், குறிப்பறிதல் விளக்கும் திருக்குறள் துணையுடனும் தெளியலாம்.

# அறங்காவலரும் ஞமலியும்

முருகதாஸ் தீர்த்தபதி, சிங்கம்பட்டி

இராமாயணத்தில் இச்சுவாகு வம்சத்தை சார்ந்த தசரத சக்கரவர்த்தி அறுபதாயிரம் ஆண்டுகளும், அவருடைய தவப்புதல்வரான இராமச்சந்திர மூர்த்தி பன்னிரெண்டாயிரம் ஆண்டுகளும் ஆண்டு உள்ளதாகவும் கூறப்பட்டு உள்ளது. இராவணவதம் முடிந்து அயோத்தி திரும்பி மகுடாபிஷேகம் செய்து கொண்ட பின் இராமராஜ்ஜியம் என விமரிசையாக கூறப்படும் வகையில் நீதி வழுவாது அரசு ஒச்சி வருங் காலையில் ஒரு நாள் என்றுமே அடிக்கப் பெறாத, நியாயம் கோரி அடிக்கப்பட வேண்டிய, அரண்மனை முகப்பில் என்று சொல்லப் படுகின்ற ஆசார வாசலில் கட்டப்பட்டிருக்கும் ஆராய்ச்சி மணி அடிக்கப்பட்டது. சபை கூடி இருக்கும் நேரத்தில் அடிக்கப்பட்டதால் ஸ்ரீ ஸ்ரீஇராமச்சந்திர மூர்த்தி ஒரு காவல்காரனை அழைத்து ஆராய்ச்சி மணி அடிக்கப்பட்ட காரணம் தெரிந்து வரச் சொன்னார். உடன் பார்த்து திரும்பிய காவல்காரன் ஒரு சாதாரண நாய் அந்த மணியை அடித்ததாகவும் மற்றும் அதன் மண்டையில் காயத்தின் காரணமாக உதிரம் வடிந்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தான். ஸ்ரீஇராமபிரான் உடனே அந்நாயை அரச சபைக்கு அழைத்து வரச் செய்தார். ஊனமுற்றோர்களையும், கீழான பிறப்பு உள்ள பிராணிகளையும் அரசு செலுத்தும் மன்னர்கள் பார்க்கக்கூடாது என சாஸ்திர விதிகள் இருந்தும்கூட நீதி கோரி வந்தமையால் அந்நாயை அரச சபைக்கு அழைத்து வரச் செய்தார் இராமபிரான்.

நாயிடம் ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தியே நேரடியாக விசாரித்த போது, நாய் அதிகாலையில் இன்று பாதையில் கிடந்த ரொட்டித் துண்டு ஒன்றை எடுக்க ஓடியதாகவும், அப்போது அவ்வழிச் சென்ற ஒரு பிச்சைக்காரன் தனக்கு முந்திச் சென்று அதை எடுக்க முயன்றபோது அவனுக்குக் கிடைக்காமையால் கழி கொண்டு அவன் அதன் தலையில் அடித்து காயப்படுத்திவிட்டதாகவும் அதற்கு நீதி வழங்க வேண்டுமென்று பிரார்த்தித்தது. ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தியின் ஏவுதல் பேரில் காவலாளிகள் குறிப்பிட்ட பிச்சைக்காரனை அரச சபைக்கு அழைத்து வந்தார்கள். நடந்தவற்றை விசாரித்தபோது அப்பிச்சைக்காரன் உண்மை என்று ஒப்புக் கொண்டான். குற்றத்திற்கு சிறை தண்டனை ஒரு நாள், பத்து நாள், ஒரு மாதம், ஓராண்டு, பத்தாண்டு என்று எல்லாம் விதித்துப் பார்த்து நாயிடம் நிறைவாவென்று கேட்டார். இல்லை என்றதும் கடைசியில் சிரச்சேதம் என்றார். அப்போதும் அந்நாய் திருப்தி அடையவில்லை. பின் என்ன செய்வது என்று நாயை அரசர் நோக்கியபோது நாய் நூதனமாக அர்த்த புஷ்டியுடன் ஸ்ரீஇராமபிரானை பார்த்தது. ஸ்ரீஇராமரும் அதைப் புரிந்து கொண்டார். உடனே அருகாமையிலிருந்த அமைச்சர் சுமிந்திரரிடம் இரகசியமாக ஏதோ சொன்னார்.

இதன் பின் சபையோர் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்திவிடும் அளவிற்கு காரியங்கள் விரைவாக நடந்தன. குற்றம் சாட்டப்பட்ட பிச்சைக்காரனை அழைத்துச் சென்று வேலைப்பாடு அமைந்த ஒரு பீடத்தில் அமர்த்தினார்கள். அதன்பின் கங்கை, காவேரி, வைகை, யமுனை தாம்பிரவருணி போன்ற புண்ணிய நதிகளின தீர்த்தங்களால் அவனை அபிஷேகம் செய்வித்தார்கள். பட்டுப் பீதாம்பரங்களால் உடுத்தி, புனுகு, ஜவ்வாது, சந்தனம் போன்ற வாசனைத் திரவியங்களை அவன் மேல் பூசி, அவனை அழைத்துச் சென்று அலங்கரித்த யானை மீது அம்பாரியில் வைத்து, பேரிகைகள் முழங்க, மேள வாத்தியங்கள் ஒலிக்க, நடன மாதர்கள் ஆடி முன் செல்ல ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். இது விசித்திரமான தண்டனை என்று இப்போது வாசகர்கள் எண்ணுவதுபோலவே அன்றும் சபையோரும் எண்ணினார்கள். விளக்கம் தேவை என்றளவில் ஸ்ரீராமபிரானை அணுகியபோது அவர் காயமடைந்த நாயிடமே விளக்கம் தெரிந்து கொள்ளும்படி கூறிவிட்டார்.

நாய் இதன் விளக்கம் சொல்லலாயிற்று, நான் எனது முன் ஜென்மத்தில் மனிதனாக இருந்தேன். முறையாக எனது பெற்றோர் களைப் பேணினேன். மூதாதையர்களுக்கு செய்ய வேண்டிய பிதுர் கடன்களை குறைவின்றி செய்தேன். அதிதிகளை கடவுள் என மதித்து உபசரித்தேன். அரசன் விதித்த வருவாயில் ஆறில் ஒன்றென்ற விகிதப்படி வரிக் கடமையை வழுவாது செலுத்தினேன். வீட்டிலுள்ள பறவை மற்றும் மிருகங்கள் உண வருந்தி, குழந்தைகள், உணவருந்தி, வேலையாட்கள் உணவருந்தி, பெற்றோர்கள் உண வருந்திய பின் உணவருந்தினேன். வறியோர்க்கு ஈந்து மகிழ்ந்தேன். குறைவின்றி தானம் தருமம் செய்தேன், கல்வி பயில்வித்த ஆசானையும் பெரியோர்களையும் மதித்துப்

போற்றினேன். இதற்கிடையே அன்பர்களும் நண்பர்களும் நேர்மையானவன் என்று கருதி என்னை உள்ளூர் கோவில் ஒன்றிற்கு அறங்காவலராக நியமனம் செய்தார்கள். அங்கும் நான் தெய்வத்திற்குப் பயந்தும், சத்தியம் பிறழாமலும் நேர்மையுடன் நிர்வாகம் செய்தேன். விபூதியைக்கூட வீட்டிற்கு கொண்டு வருவது கிடையாது. இப்படி நடந்தும் எனது நிர்வாகத்திற்கு கீழ் வேலை பார்த்த திருக்கோயில் பணியாளர்கள் களவாடியதற்காக இப்போது நாயாகப் பிறக்க நேர்ந்தது. ஆகவே அயோத்தியில் மாடத் தெருவிலிருக்கிற பிள்ளையார் கோவிலில் சமீபத்தில் நிர்வகித்து வந்த அறங்காவலர் காலமாகிவிட்டபடியால், பதவி காலியான அந்த இடத்தில் இந்த பிச்சைக்காரனை நியமனம் செய்யுமாறு திரு இராமபிரானிடம் வேண்டினேன் என்றது.

திருவனந்தபுரத்தில் அரசர் தினந்தோறும் பத்மநாபசாமியை தரிசிக்க கோவிலுக்கு வருவார். வாரம் ஒரு முறையோ, அல்லது மாதம் ஒரு முறையோ கோயிலுக்கு வரலாம் தானே! தினம் வருவானேன்! முதல் நாள் அவர் அரசு ஒச்சும் நாட்டில் ஒரு கொலை நடந்திருக்கலாம், அல்லது களவு நடந்திருக்கலாம். அல்லது ஒரு பெண்ணின் கற்பு சூறையாடப் பட்டிருக்கலாம். இக்குற்றங்களுக்கு ஏற்றவாறு தண்டிக்கப்படவில்லை என்றால் அவையாவும் அரசனையேசாரும். இப்படி அன்றாடம் தண்டிக்கப்படாத குற்றங்களுக்கான பாவம் எல்லாம் அரசனுக்கு என்றால் அரசன் இவைகளை களைந்து எப்போது வீடுபேறு அடைவது?

சிவன் மற்றும் திருமால் கோயில்களில் முறையே சிவாச்சாரிகள் பட்டாச்சாரிகள் தீபாராதனை செய்வித்துத் தீபத் தட்டை பார்க்காமல் பரிச்சாரர்களிடம் கொடுத்து சேவார்த்திகளுக்குக் காட்டச் சொல்வார்கள். இது இப்போது காலப் போக்கில் சம்பிரதாயமாக ஆகிவிட்டது. அந்தக் காலங்களில் அரச பரம்பரையினர் இது போன்று கோயில் பூஜைகளில் ஈடுபட்டவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்வித்து, நிம்மதியுடன் வாழ வைத்திருந்தார்கள். அவர்களும், நிர் விசாரமாக இருந்து ஆகமம் போன்றவைகளை ஆய்ந்து கற்று பூஜைக்கு அவசியமான தந்திர மந்திரங்களை அறிந்து குறைவின்றி பூஜைகளை செய்து வந்தார்கள். ஆகவே தீபாராதனை முடிந்ததுமே அவர்களது நிலை மாறிவிடும். சிலை கண்ணுக்குத் தெரியாது. பூஜிக்கின்ற ஸ்வாமியே நிதர்சனமாகத் தெரியும். அதனால்தான் அவர்கள் அந்நிலை மாறாத நிலையில் தீபக் தட்டை பரிச்சாரர்களிடம் கொடுத்து சேவார்த்திகளுக்குக்காட்டசொன்னார்கள். இந்நிலையிலுள்ள சிவாச்சாரி மற்றும் பட்டாச்சாரிகளிடம் பிரசாதம் வாங்குவது சிறப்பாக அமைந்தது. இவ்வுடல் கூறு முப்பத்தாறு தத்துவங்கள் அடங்கியது. ஆத்ம தத்துவம் இருபத்து நான்கும், வித்யா தத்துவம் ஏழும், சிவதத்துவம் ஐந்தும் ஆகவே மொத்தம் முப்பத்தாறு. மேலே குறிப்பிட்ட நிலையிலுள்ள சிவாசாரியார்கள் ஆத்மதத்துவ சமர்ப்பியாமி, வித்யாதத்துவ சமர்ப்பியாமி மற்றும் சிவதத்துவ சமர்ப்பியாமி என்று அவர்கள் கூறி மூன்று தடவை பிரசாதம் கொடுத்தால் முப்பத்தாறு தத்துவங்களும் சுத்தமாகிவிடும், ஆகவே பாவங்கள் தீர மன்னர் தினசரி கோவில் சென்று வருவார்.

இப்போதும் இது பொருத்தமாகும். அந்தந்த அரசு இலாகாவில் வேலை பார்க்கும் அதிகாரிக்கு தண்டிக்கப்படாத குற்றங்கள் பாவமாகப் போய்ச் சேரும், இப்போதுள்ள அரசியல் ரீதியில் அரசு உயர்மட்ட அதிகாரிகளும், பதவி வகிக்கும் அரசியல்தலைவர்களும் இத்தகைய உண்மைகளை உணர்வது மிகமிக அவசியம் ஆகும்.

---



## பலமுறை வணங்குக

**நம்மைவிட பெரியவர்களைக் காணும்போது வணக்கம் செலுத்த வேண்டும். காலையில் வணக்கம் செலுத்திவழிபட்ட பெரியவரை, மறுபடியும் மாலையில் கண்டபோது வணக்கம் செலுத்துவதில் தவறேதுமில்லை. ஒருநாளைக்கு பல வேளைகள் காபி, டீ சாப்பிடுவது இல்லையா? அதைப்போலவே பெரியவர்களைப் பல வேளைகள் ஒரு நாளில் வணங்குவதும் நமக்கு நன்மையே நல்கும்.**

—டாக்டர் *திருமுருக கிருபானந்தவாரியார்*

# கண்ணன் திருமேனி அழகு

திருக்குடந்தை சௌரிராஜ திருவேங்கடத்தான்

திருமாலுக்கு ஐந்து நிலைகள் எனப்பிரமாணங்கள் பேசுகின்றன. அந்த நிலைகளில், திருக்கோயில்களில் அவன் உகந்து அருளும் நிலையை அர்ச்சை எனப் போற்றுவோம். அப்படி அந்த பரமன் எழுந்தருளியிருக்கும் உகந்தருளிய நிலங்களிலே திருவரங்கம் முதன்மை பெற்றது என்பது ஆழ்வார்கள், பூர்வர்கள் கொண்ட முடிவு. அந்த எம்பெருமானுடைய (அரங்கன்) அழகை, திருப்பாணாழ்வார் தாம் அருளிய அமலனாதிபிரான் என்ற திவ்ய ப்ரபந்தத்தில் பத்து பாசுரங்களாலே திருவடி முதல் திருமுடி வரையில் அனுபவித்து உலகம் உய்யும்படி செய்தார்.

பகவானின் மற்றொரு நிலை (ஐந்து நிலைகளில்) விபவம் என்பதாம். அதாவது, தாமே திருவாய்மலர்ந்து அருளியபடி, நல்லவர்களைக் காக்க, தீயவர்களை அழிக்க, தர்மத்தை நிலை நாட்ட அந்த இறைவன் எடுக்கும் அவதாரங்கள் ஆகும். அவைகள் எண்ணிறந்தவை, என்றாலும் தசாவதாரத்துக்குதனிச்சிறப்பு உண்டு. தசாவதாரத்திலே, ஆழ்வார்கள் மிகவும் ஈடுபட்டது கண்ணனுடைய அவதாரம். அது ஒப்பில்லாத மேன்மை குணத்தோடு நீர்மையும் எளிமையும் பிரகாசிக்கும்படி பூர்வமான அவதாரம் எனக் கொண்டாடுகிறார்கள்.

பெரியாழ்வார், தாம் அருளிய முதல் திருமொழியில் கண்ணபிரானுடைய பால லீலைகள் ஒன்று விடாமல் முழுவதுமாக அனுபவித்துள்ளார். முதலில் ‘வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர் கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்’ என ஆரம்பித்து அவன் திருவவதாரச் சிறப்பை ஒரு திருப்பதிகத்திலே அருளிச் செய்கிறார். அடுத்து இரண்டாம் திருமொழியில் 20 பாசுரங்களிலே அக்கண்ணனின் வடிவழகை திருப்பாதம் முதல் திருமுடி வரை ஒவ்வொரு அங்கமாக அனுபவித்து வர்ணிக்கிறார். தாம் அனுபவித்து திருப்தி அடையாமல், நம் எல்லோரையும் அந்த அழகைப் பருகுங்கள் என ஒவ்வொரு பாசுர முடிவிலும் ‘வந்து காணீரே! வந்து காணீரே!’ என அழைக்கிறார், யசோதையாக மாறிய பட்டர்பிரான். அந்த அழகின் எல்லை நிலமான கண்ணன் திருமேனியில் சௌந்தர்யமான அமுதத்தை நாமும் சுவைப்போம். ஒவ்வொரு ஐந்து பாசுரங்களிலும் எப்படி ஈடுபட்டார் எனக் கண்டு அதில் சொல்லப்படும் நயங்களை-சாரங்களைப் பார்ப்போம்.

‘‘சீதக்கடல்’’ என ஆரம்பித்து ‘பிறங்கிய பேய்ச்சி’எனத் தொடங்கும் முதல் ஐந்து பாசுரங்களிலே அவன் பாதங்கள், அப்பாதங்களில் உள்ள விரல்கள், கணைக்கால், முழந்தாள்கள், தொடைகள் ஆகிய திவ்ய அவயவ சோபையில் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறார்.

**சாரமான நயங்கள் :**

பரமன் திருவடிகள் தேனே மலரும் திருப்பாதம் ஆகையால், அந்த கால் விரல்கள் கண்ணன் தன் திருவாயில் வைத்து சுவைக்கும் காட்சியை கண்டு மகிழ்கிறார். பத்து விரல்களிலும், நவரத்னங்களின் வர்ணங்களை ஒன்பது விரல்களிலும், பத்தாவது விரலுக்கு பொன் நிறத்தையும் இட்டு அந்த அற்புதமான நிறங்களின் சேர்த்தி அழகை பாருங்கள் என அழைக்கிறார். தவழும்போது அவன் முழந்தாள்களின் அழகே தனி. நரசிம்மாவதாரத்தில் இரணியனைத், தன் திருத்தொடைகள் மீது வைத்துக்கொண்டு பிளந்த படியால் அச்சுவடுகள் இப்போதும் தோற்றும் படியிருக்கும் கண்ணபிரானுடைய திருத்துடைகள் அழகைக் காண நம்மை அழைக்கிறார்.

‘மதக்களிற்று’ எனத் தொடங்கும் ஆறாவது பாசுரம் முதல்‘பெருமாவுரலில்’என ஆரம்பிக்கும் பத்தாவது பாசுரம் வரையில் கண்ணபிரானுடைய முத்து பவள வடங்களோடு சேர்ந்த அரைநாண் திகழும்படியான இடுப்பு, அழகிய நாபி, தாயால் கட்டப்பட்ட அத்தாம்பின் தழும்போடு கூடிய வயிறு, கௌஸ்தப, வைஜயந்தி முதலிய ஆரங்கள் அசைந்தாட அழகுற விளங்கும் திருமார்பினுடைய அழகை ரசிந்து ஆனந்தப்படுகிறார்.

**ரஸமான கருத்துகள் :** கண்ணன் பிறந்த திருநாள் ரோகிணி. கண்ணபிரானாக திருவவதாரம் செய்த திருமாலின் திருநட்சத்திரம் திருவோணம். கண்ணன் பிறந்த திருநாளான ரோகிணியைச் சொல்லாமல், திருமாலின் திருநட்சத்திரமான திருவோணத்தையும் நேரிடையாச் சொல்லாமல் அத்தத்தின் பத்தாநாள் தோன்றிய அச்சுதன் என (அஸ்த நட்சத்திரத்



தின் பின்னே பத்தாவதுதிருநாள் திருவோணம் என மறைத்துச் சொல்கிறார். காரணம் நேராக அவன் பிறந்த ரோகிணித் திருநாளைச் சொன்னால், யாராவது விரோதிகள் அவனுக்கு கெடுக்தல் செய்து விடுவார்களோ என அஞ்சி பிரேமையின் மிகுதியால், உண்மை திருவவதாரத்திருநாளைச் சொல்லாமல் குறிப்பால், அதை உணர்ந்துகிறார். கண்ணபிரானுடைய பொல்லாத, தீராத, அடங்காத விளையாட்டுத் தன்மையை குறிக்கும் வகையில் 'அதிரும் கடல் நிற வண்ணனை' என்கிறார்.

அடுத்து 'நாள்களோர் நாலைந்து' என ஆரம்பிக்கும் பதினொன்றாம் பாசுரத்திலிருந்து 'நோக்கிய யசோதை நுணுக்கிய மஞ்சளால்' எனத் தொடங்கிய பதினைந்தாம் பாசுரங்கள் வரையில் கண்ணபிரானுடைய தோள்கள், கைகள், பிரளய காலத்தில் அனைத்தையும் விழுங்கிய கழுத்து, சிவந்த உதடுகள் உடைய திருவாய்' திருமுகம் இவைகளின் அழகை காண நம்மை அழைக்கிறார்.

**மகிழ வேண்டிய நயங்கள் :**

கண்ணன் முதலில் பூதனையை முடித்து பின்பு சகடாசுரனை அழித்தான். அப்படியிருக்க அச்சிறு குழந்தையினுடைய மாயச் செயல்களில் ஈடுபட்டு எது முன்னது, எது பின்னது என்பதையும் மறந்து 'தாளை நிமிர்த்து சகடத்தைச் சாடிப் போய் வாள் தோள் வளையெயிற்றாருயிர் வவ்வினான்' என நடந்த செயல்களை மாற்றிச் சொல்லுகிறார். கண்ணபிரானை பிறரிடம் கொடுக்காமல், தானே அவனைக் கண்ணும் கருத்துமாக வளர்த்ததால், யசோதையின்கண்களின் கருமை நிறம், கண்ணனின் திருமேனியில் ஏறி, அப்படி கார்முகில் போல் பிரகாசிக்கிறானாம். கண்ணனுடைய திருக்கண்கள் திருவாய், புன்சிரிப்பு: அழகிய மூக்கு இவைகளுடன் கூடிய திருமுகத்தின் அழகு எல்லோரையும் வா! வா! என அழைக்கிறதாம்.

கடைசி ஐந்து பாசுரங்களில் அதாவது 'விண் கொள் அமரர்கள் வேதனைதீர' எனத் தொடங்கும் பதினாறாவது பாசுரம் முதல் 'அழகிய பைம் பொன்னில் கோல்' என்ற இருபதாவது பாசுரங்கள் வரையில் கண்ணபிரானுடைய திருக்கண்களைத் தனிப்பட்ட முறையில் அனுபவித்து, பிறகு அழகிய புருவம், காதில் அணிந்து கொண்டிருக்கும் மகர குண்டலங்கள், திருநெற்றியின் அழகு, கடைசியாக அவன் சுருண்ட கேசங்களின் அழகையும் காணும்படி நம்மை அழைக்கிறார்,

'விண் கொள் அமரர்கள் வேதனை தீர' என்ற பாசுரத்தின் மூன்றாவது அடியில் ''திண் கொள் அசுரரைத் தேய''-என அருளி பகவத் கீதையில் அவதாரப் பிரயோஜனங்களை (பயன்களை) அறிவித்தபடி, முதலில் வசுதேவர் மகனாய்ப் பிறந்து அவருடைய துயரைப் போக்கினான். பின்னர் அசுரர்களை அழித்து, தேவர்கள் துயரைத் தீர்த்தான். ஆக நல்லோரைக் காப்பதும், தீயோரை அழிப்பதும் ஆகிய சங்கல்பத்தை கண்ணபிரானுடைய திருக்கண்களிலே காண முடிகிறது என்கிறார்.

ஸ்ரீராமன் பருவம் நிரம்பிய பின்பு, தீய அரக்கர்களை, தொலைக்க முற்பட்டான். ஆனால், கண்ணனோ, தொட்டிற் பருவம் தொடங்கியே, பூதனை சகடாசுரன் முதலியவர்களை மாய்த்தான், அப்படி பருவம் நிரம்பாமல் பல லீலைகளைச் செய்தான். அக்கண்ணனை தேவகி நோற்றுப் பெற்றாள் என்ற கருத்து பிரதிபலிக்கும் வகையில் 'திருவின் வடிவொக்கும் தேவகி பெற்ற உருவகரிய ஒளி மணிவண்ணன்' என அருளுகிறார். சகல உலகங்களையும் மகாப்பிரளய காலத்தில் உண்டு திருவயிற்றில் வைத்துக் கொண்டு பிறகு உமிழ்ந்தவன் இறைவன். அப்படி காப்பாற்றிய மகிழ்ச்சியுடன், மகரகுண்டலங்களை அணிந்திருக்கும் அந்த நிகரில்லாத அழகை அனுபவியுங்கள் என்கிறார்.

சிறு பெண்கள் மணலைக் கொண்டு விளையாட சிறு முறம், பானை முதலிய பொருள்களை வைத்துக் கொண்டிருப்பார்களாம். அவைகளைப்பறித்து கொண்டு பிடிபடாமல், கண்ணன் ஓடிவிடுவானாம். அந்தக்களைப்பால் வியர்வை நெற்றியில் விழுமாம். அந்த வியர்வையோடு கூடிய திருநெற்றியின் அழகை வந்து பாருங்கள் என அழைக்கிறார்.

கடைசி பாசுரத்தில், யசோதை ஊர்ப் பெண்களை அழைத்து, கண்ணனின் முழுமையான வடிவழகை வர்ணித்து, அவர்களிடம் அவனைக் காண்பிப்பாள், அதைத்தான் நானும் பேசினேன் என்கிறார். இப்பாசுரங்கள் மூலம், கண்ணன் எல்லையில்லாத அழகைப்பருகுவர், பரமபதம்அடைந்துஅங்கும் அந்த பரமனின் அழகை திருவடி முதல் திருமுடி வரை அனுபவித்து இன்புறுவார்கள் என முடிக்கிறார்.

ஆக, பக்தியில் பழுத்த முதிர்ந்த பெரியாழ்வார், யசோதை பாவனையில் அனுபவித்த கண்ணன் திருமேனி அழகை அவர் அருளிய பாசுரங்கள். நயங்கள் மூலம் நாமும் பருகி, கண்ணன் திருவடியைப் பெறுவோமாக.





**தெய்வச் சேக்கிழார் விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கிய தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாசப் பரமாச்சாரிய சுவாமிகளுக்கு நம் ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் மாலை அணிவிக்கிறார்கள்.**

# சைவத்தின் மேன்மை

சிவநெறிவித்தகர் **மு. சுந்தரேசம் பிள்ளை**

எல்லாவுயிர்களும் வீடுபேற்றினைப் பெறும் என்று சொல்லுவது சைவ சமயமே. சந்தானாசாரியர்களுள் நான்காமவராகிய உமாபதிசிவனார் உயிர்களை இரு பிரிவுகளுள் அடக்குவர். 'துறந்தோர்' துறப்போர் என்பது அவர் வாக்கு. அஃதாவது வீடுபேறு பெற்றவர்கள். இனிமேல் பெறவிருக்கிறவர்கள். எனவே சைவசமயம் உலகிலுள்ளவர்கள் எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னிய சீர் சங்கரன் தாள் மறவாராயின் அவர்கள் இப்பேற்றினைப் பெறுவர் எனக் கூறும். கொல்வாரேனும் குணம் பல இல்லாரேனும் யாவரும் வழிபடலாம். 'யாதும் ஒன்றும் அறிவிலராயினும்' அவர்களும் வழிபடலாம். சிவபரம்பொருள் பரம கருணாநிதி. அறிவு, ஆற்றல், தகுதி முதலியவற்றில் குறைந்தவர்கட்கும் அவன் அருள்சுரப்பான், மற்றைய சமயத்தவர்கள் தங்கள் தங்கள் சமயத்தவர்களே ஈடேறுவார்கள் என்றும், வேறு சமயத்தவர்கள் நித்திய நரகத்தையடைவார்கள் என்றும் கூறுவர்; இக்கூற்றுக்கள் அவர்களது குறுகியமனப்பான்மையைப் புலப்படுத்தும்.

'சாருவாகம் முதலிய எல்லாச் சமயமும் பரமசிவனால் செய்யப்பட்டமையான் பிரமாணமே' எனச் சிவஞானபாடியத்தில் சிவஞான முனிவர் கூறுவார். சைவம் எல்லாச் சமயத்தையும் மதிப்பதால் அவை பரமசிவனால் செய்யப்பட்டன எனக்கூறும். அவரவர் அவரவர் சமயத்தில் உறுதியாக நிற்பது தவறாகாது. ஆனால் மற்றைச் சமயத்தவரை அவமதிக்காமல் நேசித்தால் இறைவன் இரங்கியருள் புரிவான் எனச் சைவம் சொல்லும். அவரவர் கொள்கையை அவரவர் பின்பற்றுமாறு விடுத்து யாவரோடும் அன்பு அடிப்படையில் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பது சைவசமயக் கோட்பாடுமாகும். அவரவரும் அவரவர் சமயத்தில் உறைப்போடு நிற்க வேண்டுமென்பதால் சைவ சமயத்தில் பிறந்தவர்கள் சைவத்தில் உறைப்போடு நிற்கவுரிமையுண்டு. பல்வேறு வகைப்பட்ட மாணாக்கர்களது அறிவுக்குத் தக்கவாறு பல்வேறுபட்ட வகுப்புகள் அமைவது போல பரம்பொருளும் பல்வேறுபட்ட உயிர்களது நிலைக்குத் தக்கவாறு ஒன்றுக்கு ஒன்று மேற்பட்ட சமயங்களைப் படைத்துள்ளார். இவ்வாறு சொல்வது சைவ சமய மாத்திரமேயாகும். பிறசமயங்களில் எந்த ஒன்றும் இக்கருத்தினைச் சொல்லவில்லை. 'அறுவகை நெறிகளும் பிறவுமாக்கிய



இறைவி' என்று கச்சியப்பரும், 'அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்' என்று அருணந்தியாரும் பகர்ந்துள்ளனர். அறுவகை நெறி என்றது அறுவகைச் சமயத்தைக் குறிக்கும். இவை நான்கு வகைப்படும். முதல் வகை சமணம் முதலியவை. இவற்றுள் ஒன்றும் கடவுள் உண்டு என்று சொல்லவில்லை. இரண்டாவது வகை ஏகான்மவாதம் முதலியவை. இவற்றுள் பல இறைவனின் வேறாக உயிர் உலகம் பொய் எனும். மூன்றாவது வகை, சாக்தம் முதலியவை. இவை கூறும் இறையிலக்கணம் நிறைவுடையதன்று. நான்காவது வகை, சிவசமவாதம் முதலியவை. இச்சிவ சமவாதம் முதலிய சமயங்கட்கும் சைவத்திற்குமுள்ள வேறுபாடு மிக மிகக் குறைவு அற்பமானது. இந்நால்வகை சமயத்துக்கும் மேற்பட்டது சைவ சமயம் ஆகும். இதுவே நிறைவுடையது, முழுமையானது.


சில சமயத்தவர்கள் தங்கள்தங்கள் சமயமே கடவுளால் ஆக்கப்பட்டதென்றும். பிறசமயங்கள் கெட்ட சமயங்கள் என்றும் சொல்லுவார்கள். எச்சமயத்தவராயினும் தத்தமது சமயக் கடவுளை வழிபடினும் அவ்வழிபாட்டைச் சிவபரம்பொருள் ஏற்றுக் கொண்டு அவ்வவர்க்கும் அருள் செய்வான் என்று சொல்லும் சைவ சமயம்; காத்தல் முதலிய செயல்

களைச் செய்யும் தெய்வங்கள் தாமாக அவற்றைச் செய்யும் ஆற்றலுடையனவல்ல. சிவ பரம்பொருள் அத்தெய்வங்களை அதிட்டித்து நின்று அவற்றைச் செய்கின்றான் என்பதும், அத்தெய்வங்களின் தன்மை, ஆற்றலுக்கு ஏற்ப பயனையும் வழங்குவான் என்பதும் தம்மை நேரடியாக வணங்கியதால் எய்தும் பயனை அவை அளிக்கமாட்டா என்பதும். போந்த பொருளாகக் கொள்ள வேண்டும்; இதனை 'யாதொருதெய்வங் கொண்டீர். அத்தெய்வமாகியங்கேமாதொரு பாகனார் தாம் வருவர்' எனவும், 'காண்பவன் சிவனேயானால் அவனடிக்கன்பு செய்கை மாண்பறன்' எனவும் சிவஞான சித்தியாசிரியர் விளக்கியுள்ளார். 'யாதோர் தேவர் எனப்படுவார்க்கெல்லாம், மாதேவன் அல்லால் மற்று ஒரு தேவர் இங்கில்லை' என அப்பர் சுவாமிகள் முதன் முதல் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார். எனவே, சிவபரம்பொருளே 'தேவதேவன்'. அவனே செழும்பொழில்கள் பயந்து காத்து அழிக்கும் மூவர்கோனாய் நின்ற முதல்வன், அவன் உலக உயிர்கட்கு மட்டுமல்ல அனைத்து தெய்வங்கட்கும் தலைவன். அத்தெய்வங்கள் பலவற்றையும் தனித்தனியே வழிபடுவது ஏற்புடையதாகாது. வழிபாட்டின் பயனை ஒரு சேரதரவல்ல சிவபரம்பொருளையே வழிபடுக.

வீடு பேற்றினையடைதற்குரிய சாதனமாகச் சமயஅனுட்டானங்(ஒழுக்கங்கள்) களைப் படிப்படியாக நிறைவுபடுத்தியுள்ளது சைவ சமயமே, பிற சமயங்களில் எந்தஒன்றும் படிகளையுடையதாகத் தெரியவில்லை. கல்லூரிகளில் இளங்கலைப்பட்ட வகுப்புக்கள், முதுகலைப்பட்ட வகுப்புக்கள் இருப்பது போல சைவ சமயத்திலும் உபாய மார்க்கம், உண்மை மார்க்கம் என இரண்டு பெரும்படிகள் உண்டு. உபாயமார்க்கமாவது உலகப்பற்றோடு செய்யும் சைவ அனுட்டான (ஒழுக்கங்கள்)ங்கள். சைவர்கள் அன்றாடம் செய்ய வேண்டிய கடமைகள். உண்மை மார்க்கமாவது உலகப் பற்றுச் சிறிதுமின்றிச் செய்யப் பெறும் சைவ அனுட்டானங்கள். தாயுமானார் போன்றவர்கள் உண்மை மார்க்கத்தையனுசரித்தவர்கள்; இளங்கலைப்பட்ட வகுப்பில் முதலாண்டு முதல் நான்காமாண்டு வரை நான்கு படிகள் இருப்பதுபோல் உபாய மார்க்கத்திலும் உபாயச்சரியை, உபாயக்கிரியை. உபாய யோகம், உபாய ஞானம் என நான்குபடிகள் உண்டு. முதுகலைப்பட்ட வகுப்பிலும் பல படிகள் இருப்பதுபோல உண்மை மார்க்கத்திலும் உண்மைச்சரியை, உண்மைக் கிரியை, உண்மையோகம் என்ற மூன்று படிகள்உண்டு. இம்மூன்று படிகளிலும் வழுவாது நின்றவர்கள் உண்மை மார்க்கத்தில் மிகச் சிறந்ததாகிய உண்மை ஞானமாகிய உயர் படியினையடைவர்.

**நால்வகை நெறியும் பயனும்**

''சங்கரன்தனையடையும் நன்மார்க்கம் நாலு-அவைதாம் ஞானம், யோகம், நற்கிரியா சரியையென நவிற்றுவதும்செய்வர்.' சிவஞான சித்தியார்.



**சரியை** திருக்கோயிலில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், திருநந்தவனம் வைத்தல், திருப்பள்ளித்தாமம் கொய்தல், மாலை-கண்ணிகட்டல், புகழ்ந்து பாடல், அடியவருக்குத் திருத்தொண்டு செய்தல் ஆகியன சரியை யாகும்.

'தாதமார்க்கம்-செய்வோர் ஈசன் உலகிருப்ருப்போர்'
—சிவஞான சித்தியார்

**கிரியை**

மணமுடையமலர்கள் தூபம், தீபம் திருமஞ்சனம், திருவமுது அமைத்தல், ஆசனமிட்டு இறைவனை எழுந்தருளச் செய்து பாவனையால் ஆவாகனம் செய்தல், மெய்யன் பால் அருச்சித்தல், துதித்தல், அக்கினிகாரியம் இவை கிரியையாகும்.

'புத்திரமார்க்கம்—நினையுங்காலை'
—சிவஞான சித்தியார்

சிவத்தியானம் செய்தல்
''சகமார்க்கம்—பெறுவர்''
சிவஞான சித்தியார்

**ஞானம்**

ஞான நூல்களை ஞானசாரியரிடம்கேட்டு அறிந்து சிவஞானம் பெறுதல்

''சன்மார்க்கஞ்....தானே''
சிவஞான சித்தியார்

சரியை முதலியனபடிகள், இப்படிகள் ஒன்றுமின்றி மற்றைய சமயங்கள் எளிதில் வீடு பேற்றினைப் பெறலாமென்னும். அது கேலிக்கு இடமாகும்.

வினை நல்வினை, தீவினையென இருவகைப்படும். தீய வினைகளைச் செய்யற்க எனக் கூறியதோடு அமையாது கள்ளுண்ணல், கொலைச் செய்தல், புலால் உண்ணல் ஆகிய இம்மூன்றையும் விலக்க வேண்டும் எனும் சைவம். உலகில் சிலர் தன்னூன் பெருக்கற்குக் கள்ளுண்ணல் முதலியன இன்றியமையாத தென்பர். அவற்றை அறவே விலக்குக எனப் போதிப்பது சைவசமயமாத்திரமேயாகும். புத்தசமயம், புலாலுண்ணலை விலக்கவில்லை. இஸ்லாமிய சமயம் புலால் உண்ணலையோ, கொலையையோ விலக்கவில்லை. கிறித்துவ சமயம் புலாலுண்ணலையோ கொலை செய்தலையோ கள் உண்ணலையோ விலக்கவில்லை. எனவே, புலாலுண்ணல், கள்ளுண்ணல், கொலை செய்தல் இவை தீயவினைகளாகும். இவற்றைக் கடிவதையே சைவம் முக்கியகொள்கையாகக் கொண்டுள்ளது. சைவத்தின் மேன்மையை விளக்க இதனினும் சிறந்தவொன்று தேவையில்லை.

உயிர்கள் ஆணவமென்னும் நோயினால் பீடிக்கப் பெற்ற நோயாளிகள்; அவ்வுயிர்கள் செய்யும் பிழைகள் யாவும் அந்நோயால் வருவனவே. எனவே உயிர்கள் இயல்பாகவே நல்லவை. இறைவன் அவ்வாணவ நோயைத் தீர்க்கும் வைத்தியநாதன். அவன் உயிர்கட்கு ஊட்டும் இன்பத்துன்பங்கள் அவ்வாணவ நோயைத் தீர்க்கும் மருந்துகள் என்று கூறுவது சைவ சமயமேயாகும். ஆணவம் ஒன்று உண்டு எனக் கொள்ளாத சமயங்கள் எண்ணில. அவை இப்பெற்றியை எங்ஙனம் அறியும்? நோய்நாடி அது தீர்க்கும் வழியையும் கூறும் நெறி, சைவ சமயமே.

''அருளினால் உரைத்த நூலின் வழி வராது அதன்மம் செய்யின் இருளுலா நிரயத் துன்பத்திட்டு இரும்பவம் தீர்ப்பன், பொருளுலாம் சுவர்க்கமாதி போகத்தால் புண்ணியம் தீர்ப்பன், மருளுலாம் மலங்கள் தீர்க்கும் மருந்து இவை வயித்தியநாதன்''

—சிவஞானசித்தியார்

சைவமல்லாத சமயங்கள் சில மனிதர்கள் இயல்பாகவே கெட்டவர்கள், இறைவன் அவர்கள்செய்யும் குற்றத்திற்காகஅவர்களைத் தண்டிக்கும் நீதிபதியென்று கூறும்.

புறச்சமயத்தவர்களை வலிந்து இழுக்காதது சைவ சமயமே. மற்றைய சமயத்தவர்கள் ஏனைய சமயத்தவர்களைத் தங்கள்பால் இழுப்பதையே கடனாகக் கொள்வர். சைவம் மதமாற்றத்தில் நம்பிக்கை இல்லாதது. நிலைத்த கோட்பாடு உடையது.

வைணவத்தில் இருந்து சைவம் திரும்பியவர்கள் பலர் உலகுடைநாயனார், அரதத்தர் முதலியவர்கள்.

சமணத்திலிருந்து சைவம் திரும்பியவர்கள் பலர். மகேந்திர பல்லவன், கூன்பாண்டியன் முதலியவர்கள், நாவுக்கரசர் நம்பர் அருளாமையினால் சமயமாற்றம் பெற்றார். அம்மாற்றம் நிலைக்க வில்லை. மீண்டும் சைவம் புகுந்தார்.

சைவ சமயத்தில் பிற சமயத்தில் சொல்லப்பெறாத உண்மைகள் பல உள. அவற்றையாய்ந்து சேக்கிழார் விளக்கியுள்ளார். அவ்வாய்வு சாக்கிய நாயனார் கண்ட முடிவாக அமைந்துள்ளது. அந்நாயனார் வேற்றுச் சமயத்தவர். புத்தம் சார்ந்தவர். கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் இவ்விரு சமயத்தவர்கள் முற்பிறவியுண்டென்பதையும் அப்பிறவியில் செய்த வினையின் பயனை அடுத்த பிறவியில் அனுபவித்தாக வேண்டும் என்பதையும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். இனி: புத்தர்கள், சமணர்கள் இவ்விருசமயத்தவர்கள் அவரவர்செய்த வினையே அதற்குரியபயனைத் தானே தரும். வினைப்பயனை வினை செய்தவர்பால், சேர்ப்பிக்க ஒருவன் தேவை இல்லையென்பர். எனவே வினை, வினையைச் செய்தவன், வினையால் வரும் இன்பத் துன்பமாகிய பயன், அப்பயனை அவ்வினையைச் செய்தவனிடத்தில் சென்று சேரும்படி செய்யும் ஆண்டவன் என நான்கு உண்டு. 'இவ்வியல்பு சிவநெறியல்லாத பிற நெறிகளுக்கு இல்லையென்றும் உலகில் உயிர்களை உய்விக்கின்ற பரம்பொருள் சிவமே என்பதையும் சாக்கியர் இறை அருளாலே உணர்ந்து அறிந்தார் என்று சேக்கிழார்கூறுவர். வினையோ சடப்பொருள், அது எங்ஙனம் செய்தவனைச் சென்று சேரும்? வினைவாதிகள் கூற்று பொருந்தாது. ஒரு பிறவியே உண்டு என்ற கொள்கையும் பொருந்தாது.

வள்ளுவனார் 'எழுமையும் ஏமாப்புடைத்து' என்பர்.

''செய்வினையும், செய்வானும் அதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக் கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றிற்கு இல்லையென
உய்வகையால் பொருள் சிவம் என்று அருளாலே உணர்ந்தறிந்தார்''

திருத்தொண்டர் புராணம்-சாக்கியர் நாயனார் புராணம்

உலகப்பெரும் சமயங்களுள் ஒன்று கிறித்துவம். அது ஏசுநாதர்தான் மக்களுக்கு வீடுபேற்றினை நல்கவல்லவர் எனும். இஸ்லாமிய சமயம், 'அல்பாகித்தாலா' என்ற பெயர் தவிர வேறு பெயர் இறைவனுக்கு இல்லை, உலகில் திருக்குரான் ஒன்றுதான் இறைவனால் அருளிச் செய்யப் பெற்ற நூல் என்றும் கூறும். இக்கூற்றுக்கள் அனைத்தும் குறுகிய மனப்பான்மையின் விளைவாகும். ஆனால் சைவ சமயத்திலோ யார் எச்சமயத்தைச் சார்ந்திருந்தாலும் எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் அவரனைவர்க்கும் பயன் உண்டு என்றும், அப்

பயனை வழங்கும் பரம்பொருள் சிவபரம் பொருளேயென்றும். அப்பரம்பொருள் பிறப்பு இறப்பு இல்லாதது, வேதனைப்படாதது. மேல் வினை செய்யாதது என்றும் கூறப்பெற்றுள்ளது. இவ்வுண்மைகளை அருணந்தி சிவாச்சாரியார் இனிது விளக்கியுள்ளார்.

''இனமலர் கொண்டு இச்சித்த தெய்வம்
போற்றி சிவமுதலகற்றிவாழும் செயல்
அறமானால்
யார்க்கு முனமொருதெய்வம் அச்செயற்கு
முன்
னிலையாம் அன்றே' என்றும்

''மற்ற தெய்வங்கள் வேதனைப்படும், இறக்கும் பிறக்கும், மேல்வினையும் செய்யும். ஆதலால் இவையிலாதான் அறிந்து அதன் செய்வன் அன்றே' என்று அருளியுள்ளார். உருவ வழிபாட்டினை உலகக்குணர்த்திய சமயம் சைவமே. உலகப் பெரும் சமயங்களில் பல உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லாதவையாகும். மன ஒருமைப்பாட்டினையுணர்த்தி யுய்விப்பது உருவ வழிபாடு. இதனையுணராதவர் விக்கிரக-ஆராதனை கூடாதென்பர். இறைவன் ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லாதவன். அவன் உயிர்கள் உய்யும் பொருட்டு பல்வேறு திருமேனிகளைக் கொள்வான். உருவ வழிபாட்டுக்குள் அருவம், அருவுருவம் ஆகிய திருமேனிகளும் அடங்கும்.

''உருமேனிதரித்துக் கொண்டதென்றலும்
உருவிறந்த
அருமேனியதுவும் கண்டோம் அருவுருவான
போது
திருமேனியுபயம் பெற்றோம் செப்பிய மூன்றும்
நந்தம்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு
காணே என்பர்''

— சிவஞானசித்தியார்

கருணாமூர்த்தியாகிய கடவுள் உயிர்கள் படும் துன்பத்திற்கு இரங்கி திருமேனிதாங்கி அவதாரம் செய்வார். அவர் கொள்ளும் திருமேனி வினையால் வந்ததன்று, உயிர்களின் உடல் வினையால் ஆகியது; 'வினைப் போகமே ஒரு தேகம்' கண்டாய் என்பர் பட்டினத்தார். இறைவன் கருணைகாரணமாகத் திருமேனி கொள்வான். 'அருளால் திருமேனி சாத்தி' என்பர். 'நந்தம் கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவு' என்பர் அருணந்தியார், கருணையினால் கடவுள் வடிவம் கொள்ளும் போது அவன் முற்றறிவுடையனாதலின் உயிர்களின் பக்குவத்திற்கேற்ப ஒன்பது வகையான திருமேனி கொள்வான், நாதம், பிந்து, சத்தி சிவம் எனும் அருவத் திருமேனி நான்கும் இலிங்கமென்னும்அருவுருவத்திருமேனி ஒன்றும் அயன், அரி, அரன், மகேஸ்வரன் எனும் உருவத்திருமேனி நான்குமாக ஒன்பது வடிவம் கொள்வான்; அயனாய்ப் படைப்பான். அரியாய்க் காப்பான். அரனாய் அழிப்பான், மகேஸ்வரனாய் மறைப்பான். நாதம் விந்து



சக்தி சிவமாய் அருள்பாலிப்பான். இவையேயன்றி இறைவன் கொள்ளும் உருவங்கள் போக வடிவம், யோகவடிவம், கோர வடிவம் என மூவகைப்படும். உயிர்கள் உலக இன்பங்களைத் துய்க்க போகவடிவமும் உயிர்களின் வினையொழியக் கோர வடிவமும் உயிர்கள் வீடுபேற்றினைப் பெற யோக வடிவமும் கொள்வான்.

'போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப்
புரிதல் ஓரார்
யோகியா யோகமுத்தி உதவுதல் அதுவும்
ஓரார்
வேகியானாற்போற் செய்த வினையினை
வீட்டல் ஓரார்
ஊகியாமூடரெல்லாம் உம்பரின் ஒருவன்
என்பர்''

(சித்தியாசிரியர்)

அம்மையோடு கூடியிருக்கும் வடிவம் போக வடிவம். திருவதிகை முதலிய வீரட்டானங்களில் அம்பு-வில் முதலிய ஆயுதங்களுடன் கூடி இருக்கும் வடிவம் கோரவடிவம், கல்லால மரத்தடியில் தென்திசைக் கடவுளாய் வீற்றிருக்கும் வடிவம் யோக வடிவம். எனவே இடப்பாகம் மாதராளோடு இயைந்து உயிர்க்கு இன்பம் அடைவிக்கும் வடிவம் சிறந்ததென்ப. உயிர்கள் போகம் அனுபவிக்க இறைவனும் போகியாவான்.

'தொண்டனேன் புணருமாபுணரே' என்பது
திருவிசைப்பா
'ஒருமுகம் குறவர் மடமகள் கொடிபோல்
நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே'

என்பது திருமுருகாற்றுப் படையிலுள்ள ஒரு தொடர். இதற்கு நச்சினார்க்கினியர் 'காம நுகர்ச்சியில்லாத இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான், உலகில் இல்வாழ்க்கையினிது நடத்தற்கென்று உணர்க' என்பா. உயிர்கள் ஆண், பெண் என்னும் இரண்டுருவம் எடுத்தலால் இறைவனும் மாதொரு பாகனாவன்—(ஆண், பெண் ஆவன்)

சைவம், இறைவனை அன்பு ஒன்றினால் தான் அடைய முடியும் எனக் கூறும். 'பக்தி வலையில்படுவோன் காண்க' என்பர் மணிவாசகர், உயிர் இடையறாது அன்பு செலுத்தினால் இறைவன் இன்னருள் பாலிப்பான் 'அன்பால் அன்றியாவாக்கும் அறியொணா மலர்ச் சோதியான்' என மணிவாசகரும் 'அயரா அன்பின் அரன்கழல் செலுமே' என மெய்கண்டாரும் அருளியுள்ளாா. உயிர்கள் உலகப் பொருள்களின்பாலுள்ள பற்றை நீக்கினால் இறைவன்பால் முழுஅன்பு உண்டாகும். இறைவனிடத்தே செலுத்தும் முழு அனபே ஞானமாகும் என்பர் சேக்கிழாா. 'ஞானம் ஈசன்பால் அன்பே' என்பது அவர்வாக்கு. சைவம் உலகிற்கு விடுக்கும் ஒரே செய்தி 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' என்பதாகும். அன்பின் அடிப்படையில் வாழ்ந்தவர் அறுபான்மும்மை நாயன்மார்களாவர். அவர்கள் அனைத்துயிர்களிடத்தும் அன்பைப் பொழிந்தவர்கள். 'எவ்வுயிரும்' என்பதில் உயர்திணை அஃறிணை ஆகிய இரு திணை உயிர்களும் அடங்கும். காரைக்காலம்மையார் போன்றவர்கள் இறைவன் பால் முதற்கண் வேண்டிப் பெற்ற ஒன்று அன்பேயாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கும் அன்பு நெறியின் கூறுகளேயாகும். இந்நான்கையும் உள்ளடக்கியே மணிவாசகர் 'பக்தி நெறி அறிவித்து' என்று திருவாய்மலர்ந்தருளினார். இதுகாறும் சைவத்தின் மேன்மையைப் புலப்படுத்தும் பல கூறுகளைக் கண்டோம். இனி அச்சைவ நெறியாம் தெய்வச்சிவநெறி யாருக்குச் சொல்லப் பெற்றது என்பதனைக் காண்போம்.

'சைவப்பெருமைத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்று உண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத்துள்ளார்க்கு வகுத்துரைத்தானே'

இப்பாடல் திருமூலர் அருளியது. இதில் நந்தி வகுத்துரைத்தான் என்றுவினைமுடிபு கொள்ள வேண்டும். யாருக்கு உரைத்தான் என்பதை ஆசிரியர் 'வையத்துளார்க்கு' என்ற ஒரு தொடரால் விளக்கியுள்ளார். எனவே, நந்தியாகிய சிவபரம்பொருள் வகுத்த அந்நெறி தெய்வச் சிவநெறி என்பது பெற்றாம். அது ஒரு கூட்டத்தாருக்கோ, ஒரு சமயத்தாருக்கோ, ஒருமொழி பேசுவோர்க்கோ, ஒரு நாட்டில் உள்ளவர்க்கோ ஒரு காலத்தில் உள்ளவர்க்கோ உரியதன்று தெய்வநெறியாதலால் அது பொது நெறியாகத்தான் இருக்கவியலும். எனவே, இறைவன் அனைத்து உலகிற்கும் வழங்கிய பொது நெறி சித்தாந்த செந்நெறியாகும்.

இந்நெறியின் மாண்புகள் பலவற்றைத் தொகுத்துக் காணலாம். சைவ சமயமே சமயம். சமயாதீதப் பழம்பொருளைக் கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டுமிந்தக் கருத்தைவிட்டு பொய்வந்துழலுஞ் சமயநெறிபுகுத வேண்டாம் முத்திதருந் தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாரும் செகத்திரே' என்பார் தாயுமானார்

'சைவமல்லது மற்றொன்று இல்லை'

''இப்பரிசாம் சமயமுமாகி அல்லவாகி
யாதுசமயமும் வணங்கும் இயல்பாகி''

'இராசாங்கத்து அமர்ந்தது வைதிக சமயம்' சேக்கிழார்.

உலகியல் இன்பங்களை வெறுக்காது வேண்டிப் பெற அனுமதி வழங்கல்.

உடையார் இவர் யாவராயினும் பின் பற்றுதற்கு உரிய கொள்கையுடைத்தாதல்.

வித்தகம் பேசவேண்டாம் பணி செய்ய வேண்டும் என ஆணை வழங்கல்.

காணமுடியாத கடவுளைக் காணுதற்குரிய இடம் குருலிங்க சங்கமம் எனஆற்றுப்படுத்தல்.

எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னிய சீர்சங்கரன் தாள் மறவா திருத்தல்.

ஆடவர்-பெண்டிர் இருபாலரும் வீட்டின்பம்பெறுதற்குரியர் என்பதை உறுதிப்படுத்துதல்.

தவறு செய்தவர்கள் தவற்றினை உணரின் அவர்களையும் ஏற்று அரவணைத்தல்.

இசையும் கூத்தும் தள்ளத் தக்கனவல்ல கொள்ளத் தக்கனவெனல்.

சமயங்களில் பல தத்துவங்கள் அளவில் அமையவும் சைவம் தத்துவாதீதன் ஒருவன் உண்டெனக்கூறும்.

உடலைவறுத்தாது உள்ளம் அஞ்செழுத்தை ஓதின் ஆண்டவன் அவ்வுள்ளத்தின் உறைவான் எனும்.

மருந்து உண்பவன் அருவருப்புடன் உண்டாலும், ஆர்வத்துடன் உண்டாலும் பயன் பெறுமாப்போலோ இறைபணியைப் பற்றுடன் செய்தாலும் பற்றின்றிச் செய்தாலும் பயன் பெறுவான் எனும். பொன் நிறமுடைய புறாவும்

கருநிறமுடைய காக்கையும் இமையஞ் சாரின் பொன் நிறம் பெறுமாப்போலே தவமுடையார் அஃதிலார் இறைவனை யடையின் இறைபதம் பெறுவார் எனும்.

வாழ்வெனும் மையல் விட்டு வறுமையால் சிறுமைதப்பி தாழ்வெனும் தன்மை பெறுவர் உயர்வர் எனும்.

இறையருள் இருப்பின் செயற்கரிய செயலைச் செய்யயியலும் எனும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உயரிய கொள்கையுடையது.

கிரியாபாதம் ஞானபாதம் என்னும் இரு வகையாகிய இருபத்தெட்டு மூலாகமம், இருநூற்று எழுபது உபாகமம் இவற்றையடிப்படையாகக் கொண்டிருப்பது. உலகில் பலவிடங்களில் நிறைந்துள்ள சிவலிங்க வழிபாட்டிடங்களாகிய சிவாலயங்களைக் கொண்டு விளங்குவது; தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் ஞான நூல்கள் பலவற்றைப் பெற்றிருப்பது, எந்நாட்டவரும் ஏற்றுப் போற்றும் கொள்கைச் சிறப்புடையது, வழிபாட்டுச் சமயமாக விளங்குவதோடு வாழ்க்கைச் சமயமாகவும் விளங்குவது; தேசிகர் தம்மையும் சிவநேசர் தம்மையும் சிவம் எனவே கண்டு வழிபடுகவென ஆணை வழங்குவது.

இயற்கையில் இறைக்காட்சியைக் கண்டவர்களையும் காட்டியவர்களையும் கொண்டிருப்பது.

சிறுதெய்வ அதிதெய்வ வழிபாட்டினை விலக்குவது.

சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை எனும்.

புந்திவட்டத்திடையும் புக்கு நிற்பவன் இறைவன் எனும்.

குருலிங்க சங்கம வழிபாடு மூர்த்தி தலம் தீர்த்தம் வழிபாடு இவற்றை வற்புறுத்தும்.

மணிபலவே பொன் ஒன்றேயாதல் போலவும், பசுப்பல பால் ஒன்றேயாதல் போலவும் பல உறுப்புக்களையுடைய உடலில் உயிர் ஒன்றேயாதல் போலவும் அறுசமயம் எனப் பெயர் வேறுபடினும் இறைவன் ஒருவனே எனும்.

துறவறமே சிறந்தது எனும் புத்தம். இல்லறம், துறவறம் இரண்டுமே சிறந்தனவெனும் சைவம்.

புத்தம் வைணவம் இறைவனுக்கும் பிறப்பு உண்டெனும். சைவம் இறைவன் பிறப்பில்லி எனும்.



இறைவன் வித்தில்லாமலே விளைவு செய்குவான். 'விச்சதின்றியே விளைவு செய்குவாய்' என்பது மணிவாசகம்.

பொங்கி நின்றெழுந்த கடல் நஞ்சினை பங்கியுண்டதோர் தெய்முண்டோவெனச் சவால் விட்ட சமயம் சைவம்.

'உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாமல் எங்கள் உத்தமனே' என்ற உறுதிப்பாடு உடையது சைவம்.

காவிரியில் நீராடினால் காவிரிக்கா நன்மை? நீராடினவர்க்கன்றோ! அஃதே போல கடவுளை வணங்கினால் கடவுளுக்கா நன்மை? வணங்கியவருக்கன்றே என்றுரைக்கும் சமயம் சைவம்.

ஊழையும் வெல்ல வல்ல அடியவரைப் பெற்ற சமயம் சைவம், சான்று. 'ஒருவனார் அடியவரை ஊழ்வினை நலிய வொட்டார்' சுந்தரர் வாக்கு.

உயிர்க்கு இலக்கு இறைவனே, உலகமல்ல.

''எத்தவத்தோர்க்கும் இலக்காய் நிறை எம்பெருமான்'' இது அப்பரடிகள் வாக்கு.

வருணப் பாகுபாட்டினை ஏற்காத சமயம் சைவம்.

செயற்கரும செயல் செய்த அடியவரையும் இறைவனையும் உடையது சைவம்.

'சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது' —சிவஞான சித்தியார்.

இத்தகைய சைவநெறி சார்ந்து சகலரும் இன்புறுவார்களாகுக.

# பெரிய புராணத்தைப் போற்றுவமே!

**கலைப்பொழிலன்**, குன்றத்தூர்

உலகெலாம் ஏத்துமோர் ஒப்பிலாப் புலவன்
தப்பிலாத் தவத்தோன் தமிழ்த்தாய்த்
தலைமகன்
பொய்த்திடா மாரியும் பொங்கு தமிழ்மணமும்
செழித்திட சைவம் சிறப்புறு நகராம்
சீர்மலி குன்றத்தூர் சேக்கிழார் பெருமகன்
தாளாண்மை குன்றா வேளாண் மரபோன்

அருங்கலை விநோதன் அநபாய னிடத்துப்
பெருமுத லமைச்சாய் பேருடன் விளங்கி
தூக்குசீர் அடியோன் தில்லைபேர் இறைவன்
ஊக்கமுடன் ஓர்சீர் 'உலகெலாம்' எடுத்தருள


போக்கப் பிறவியிருள் பொய்யிலா மார்க்கமாய்
தனித்திறக்காப்பியமாய்தலைப்படு காவியமாய்
சிந்தைக்கு இனியதாய் செவிக்கோர் அமுதாய்
தொட்ட விடத்தூறும் பத்திப் பனுவலென
ஆக்கித் தந்தனன் அறுபத்து மூவடியார்
மாக்குரவர் ஒன்பதின்மர் மருளற்ற
சரிதையினை

இங்கிதன் சிறப்பைக் கூறிடும் காலை
இருள்நிறை பிறப்பின் பெருஞ்சிறைத் துன்பம்
செங்கதிர் முன்பனி யெனத்தேய்ந் திறுமே!
முன்னை வினையெலாம் முறிந்து களையுமே!


விந்தையுறு வீட்டிற்கு விடிவிளக் காகுமே.
பொங்கிடும் பவஇருள் பொசுங்குமே மற்றும்
அன்பின் பெருமையை அறிகநீ என்றிடுமே.

மண்ணிடம் பொன்னிடம் மற்றுள பொருளிடம்
பெண்ணிடம் கொண்டுள பற்றினைப் போக்கி
ஓட்டையும் பொன்னையும் ஒக்கவே கருதி
பயன்கரு தாதஓர் பற்றற்ற அன்பினை
இறையிடம் இட்டே இறைஞ்சிசீர் உரைப்ப
தால்
அளவிலாப் பெருமையில் அருந்திற மாற்றி
நீங்காப் பிறவியை நீக்கிய வித்தகர்
முடிமன்னர் குயவர் மறவருடன் வண்ணார்
பறையொலிப் போர்சாலி பரதருடன் வணிகர்
புவிமீது பலகுலத்துப் பெரியோர் மாட்சிதனை
போற்றிடும்சமத்துவப்பொதுநிலைபொலிவதை

சரித்திர மாக்கிய சால்பினைச் செப்பிடும்
புவித்திறம் அறியுமோர் புண்ணியம்
சான்றதால்
உடலினை ஒழித்துயிர் உய்வழி தன்னைக்
கடலமு தாயெடுத்துக் கரத்தில் கொடுப்பதால்
பொய்யிலா மாக்கதை பெரியபுரா ணத்தை
மெய்யாய் ஏத்தி மனத்தால் போற்றுவமே?




தெய்வச்சேக்கிழார் விழாவில் ஓதுவார் மூர்த்திகள் கலைமாமணி தருமபுரம் சுவாமிநாதன்
மற்றும் கலைமாமணி லால்குடி சுவாமிநாதன்



# ஆலய தத்துவமும் வழிபாட்டு விளக்கங்களும்

வழுத்தூர் இராம. சீனிவாசன்,
எம்.ஏ., பி.டி.

**(முன் தொடர்ச்சி)**

நந்திதேவரை வழிபடத் துவங்கினோம். துவஜஸ்தம்பத்தின் அருகில் இருக்கும் நந்தி அதிகாரநந்தி. கோயில்களில் பொதுவாக ஐந்து வகை நந்திகள் பிரதிஷ்டைசெய்யப்பட்டிருக்கும். மூலலிங்கத்தின் அருகில் உள்ள நந்தி கைலாசநந்தி. இதற்கு அடுத்து ப்ரகாரத்தில் உள்ள நந்தி, மகாவிஷ்ணு சிவபெருமானைத் தாங்க ரிஷப வடிவம் எடுத்ததைக் குறிப்பது. மூன்றாவதாக உள்ள நந்தி பக்தர்களை உள்ளே சிவ தரிசனத்திற்கு அனுப்புவதற்கு அதிகாரம் பெற்ற அதிகாரநந்தி. நான்காவதாக உள்ளது சாமான்யநந்தி. ஐந்தாவது நந்தி விசுவரூபம் எடுத்துப் போருக்கு முன்னே செல்லும் மகா நந்தி. நந்தி இறைவனை நோக்கியவாறு அமைந்திருப்பது ஆன்மா எந்த நேரமும் இறைவனைத் தேடுதலையே நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

இப்பொழுது மூலஸ்தானத்திற்குள் செல்வோம். இதுவே கர்ப்பகிருகம். தாயின் உடலில் உள்ள புனிதமானதும் ஜீவன்பத்துபாதம் வாழ்ந்து இறைவனோடு நேரிடைத் தொடர்பு கொள்ள காரணமான கர்ப்பப்பையை ஒத்தது. கர்ப்பத்தில் வளரும் சிசு பிரணவத்தை ஒட்டிய அமைப்புக் கொண்டதாகவே வளரும். தலைபாகம்மேலும், கீழ்பாகம் அகன்றும் காணப்படும். அகரம், உகரம், மகரம் ஆகியவற்றை ஒன்றாக இணைத்து ஓங்காரமாகத் திகழ்வது போன்று சிவலிங்கம் அமைந்த கர்ப்பகிருகம் கண்ணில்படுகிறது. ஆரவாரம் இல்லை. அனைத்தும் ஒடுங்கிய இடம். மெல்லிய, மனதிற்குகந்த, இருள்படர்ந்த நிலையில் தூண்டாமணி விளக்கின் ஜோதி வெளிச்சத்தில் தரிசனம். நவீனமான ஆர்ப்பாட்டங்களுக்கு அங்கு இடம் இல்லை. அடங்கி, ஒடுங்கி, ஆன்றவிந்து பிரும்மத்தை உணரவைக்கும் பேரின்பமான இடம். பிடிசாம்பலாவோம் என்பதை உணர்த்தும் திருநீறும், ஜோதியைக் காட்டி இறுதியில் மிச்சம் மீதி எதுவும் இல்லாமல் தன்னையே ஜோதியாக்கிக் கொள்ளும் கற்பூர சோதியும் தவிர வேறொன்றும் காணப்படாத தத்துவங்கள் நிறைந்த பரபிரும்மத்திற்கு உகந்த இடம்.

லிங்கம் என்பது காரணம், சுப்ரபேதம், வாதூலம் முதலான ஆகமங்களால் விளக்கப்படும் பேறுபெற்றது. எந்த இடத்தில் பிரளய காலத்தில் சேதன, அசேதனப் பிரபஞ்சங்கள் அனைத்தும் லயம் அடைந்து பின்னர் மீண்டும் படைப்புக் காலத்தில் எதிலிருந்து இந்த அண்டசராசரங்களும் உற்பத்தியைத் துவங்குகின்றனவோ அதுவே லிங்கம். பிரளய கால அழிவிற்கும், உற்பத்திகால ஆக்கத்திற்கும் காரணமாக அமைகிறது. இதைத் திருக்குடந்தை கும்பேசர் வரலாறு விவரிக்கிறது. லிம் என்பது லயம், ஒடுங்குதல் என்று பொருள்படும். 'கம்' என்பது மீண்டும் தோன்றுதல், வெளிவருதலைக் குறிக்கும். இந்த இரண்டு செயல்களுக்கும் ஆதாரமான அதிருத்ரமாதலின் இரண்டும் இணைந்துலிங்கம் என்று வழக்கில் அழைக்கப்படலாயிற்று. அருவமாகவும், அதேசமயம் உருவமாகவும், பிருதிவி அப்பு, தேவு, வாயு, விண்வெளி மண்டலங்களை உணர்த்தும் புனிதப் பொருளாகவும் லிங்கம் நமக்குக் காட்சி தருகிறது. வருண பத்ததி என்ற புனித நூல் சிவலிங்கத்தை படைப்பிலிருந்து தொடங்கி ஐந்தொழில்களை செய்யும் பெம்மான் என்றும் கூறுகிறது. ரிக் வேதம், 'தேவர்கள் செல்வத்தை அடையும் பொருட்டு விசித்திர உருவமான சிவலிங்க உருவை கர்த்தியாக அபிஷேகம் செய்து வழிபட்டார்கள்' என்று கூறிப் போற்றுகிறது. சிவலிங்கத்தில் பீடமாக உள்ள பகுதி விந்து எனப்படும். லிங்கமாக உள்ள பகுதி நாதம் எனப்படும். இதைத்தான் 'நாதவிந்துகலாதி நமோ நம' என்று பாடிப் புகழ்ந்தனர் ஆன்றோர்.

—(தொடரும்)



# ஸ்ரீ நாலாயிர திவ்யப்பிரபந்தம் நயவுரை

டாக்டர் ஜெகத்ரட்சகன்



## (4)

## பெரியாழ்வாரின் திருமொழி

### தாலப் பருவம்

மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி
ஆணிப்பொன்னால் செய்த வண்ணச்
சிறுத்தொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ
வையம் அளந்தானே தாலேலோ 44

இரண்டு பக்கங்களிலும் மாணிக்கக்கல்லை யும்நடுவில் வைரத்தையும் ஒழுங்குபடக்கட்டிப் பசும் பொன்னாலே செய்த அழகிய சிறிய தொட்டிலை உனக்கு பிரமன் விரும்பி அனுப்பி னான். மாவலியிடம் சென்ற வாமன வடி வினனே! தாலேலோ! மண் அளந்து பெற்ற நெடுமாலே தாலேலோ!

உடையார் கனமணியோடு ஒண் மாதுளம்பூ
இடை விரவிக்கோத்த எழிற் தெழ்கினோடும்
விடை ஏறு காபாலி ஈசன் விடுதந்தான்
உடையாய் அழேல் அழேல் தாலேலோ
உலகம் அளந்தானே தாலேலோ 45

எண்ணத்தக்க விடை ஏறிவரும் கபாலி, ஈசன், சிவபிரான், கண்ணன் இடுப்பில் சேர்ந் திருப்பதான பொன்மணியோடு நடுநடுவே கலந்து கோத்த இடைச்சுரிகையோடும் கூடி யுள்ள அழகிய மாதுளம் பூக்கோவையினை அனுப்பியுள்ளான். எல்லாம் உடையவனே. அழாதே ஏற்றுக் கொள்; அழாதே ஏற்றுக் கொள், உலகம் அளந்தவனே தாலேலோ.

என்தம்பிரானார் எழிற்திருமார்வற்குச்
சந்தம் அழகியதாமரைத் தாளற்கு
இந்திரன்தானும் எழில் உடைக் கிண்கிணி
தந்து உவனாய் நின்றான் தாலேலோ
தாமரைக் கண்ணனே தாலேலோ 46

எனக்குத் தலைவனாய், அழகிய திரு மார்பையுடையவனாய், செந்தாமரைத் திருவடிகளையுடையவற்கு மூன்று உலகங்களை யும் ஆளும் இந்திரன் அழகுடைய கிண்கிணி யைத் தனது காணிக்கையாகக் கொடுத்து நின் றான் தாலேலோ! காண்கிறவர்களைக் களிக்கச் செய்யும் தாமரைபோல் திருக்கண்களை உடையவனே தாலேலோ.

சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்
அங்கைச் சரிவளையும் நாணும் அரைத்
தொடரும்
அங்கண்விசும்பில் அமரர்கள் போத்தந்தார்
செங்கண் கருமுகிலே தாலேலோ.
தேவகி சிங்கமே தாலேலோ 47

சிறந்த வலம்புரிச் சங்கையும், சிவந்த திருவடிகளிலே சதங்கையையும், அழகிய திருக் கைக்கு முன்கை வளையையும், திருத்தோள் வளைகளையும், திருமார்புக்கு மதாணிநாணை யும், அரை வடத்தையும், அழகிய விண்ணவர் அனுப்பினர். சிவந்த கண் சேர்ந்த கரிய திரு மேனியனே தாலேலோ! தேவகி வயிற்றில் பிறந்து, சிங்கக்குட்டி போல் செருக்கையுடைய வனே! தாலேலோ!

எழில் ஆர் திருமார்வுக்கு ஏற்கும் இவை என்று
அழகிய ஐம்படையும் ஆரமும் கொண்டு
வழுஇல் கொடையான் வயிச்சிரவணன்
தொழுது உவனாய் நின்றான் தாலேலோ!
தூமணி வண்ணனே! தாலேலோ. 48

அழகுள்ள திருமார்புக்கு சேரும் ஐம் படைத் தாலியையும் முத்துவடத்தையும் எடுத்துக் கொண்டு கைம்மாறு கருதாக் குற்ற மில்லாத கொடையையுடைய அளகேசன் 'இவற்றை அங்கீகரிக்க வேண்டும்' என்று கை கூப்பிக் கொண்டு இடையில் நின்றான் தாலேலோ. நீலமணி போலேயிருக்கிற வடிவை யுடையவனே தாலேலோ.

ஓதக் கடலின் ஒளிமுத்தின் ஆரமும்
சாதிப் பவளமும் சந்தச் சரிவளையும்
மா தக்க என்று வருணன் விடுதந்தான்
சோதிச் சுடர் முடியாய் தாலேலோ
சுந்தரத் தோளனே! தாலேலோ 49

அலை அடர்ந்த கடலினின்றும் உண்டான ஒளி முத்துகளாலான ஆரமும், நல்ல உயர்ந்த பவழ வடமும், அழகுள்ள முன்கை வளைகளும், தோள் வளைகளும் மதிப்புடையன என்று வருணன் அனுப்பியுள்ளான். உலகண்ணலே! ஒளிமயமுடியுடையவனே! தாலேலோ! நகைகள் மிகை என்று சொல்லும்படியான அழகிய திருத்தோள்களையுடையவனே தாலேலோ.

கான்ஆர் நறுந்துழாய் கைசெய்த கண்ணியும்
வான்ஆர் செழுஞ்சோலைக் கற்பகத்தின் வாசிகையும்
தேன்ஆர் மலர்மேல் திருமங்கை போத்தந்தாள்
கோனே அழேல் அழேல் தாலேலோ
குடந்தைக் கிடந்தானே! தாலேலோ 50

காட்டில் வளர்கையாலே நறுமணத்தோடு கூடிய திருத்துழாய் கொண்டு கட்டிய திருமாலையும், வான் நிறைந்து எழிற் சோலையிலுள்ள கற்பக பூவாலே செய்த திருநெற்றி மாலையும், தேன் மாறாத தாமரை மலர்மேல் உறைகின்ற இளமையும் அழகும் வாய்ந்த திருமங்கை வரவிட்டாள். மண்விண்ணுக்குத் தலைவனே! அழேல் அழேல். குடந்தையிலே கண் வளர்பவனே! தாலேலோ.

கச்சோடு பொற்சுரிகை காம்பு கனகவளை
உச்சி மணிச்சுட்டி ஒண்தாள் நிரைப்பொற்பூ
அச்சுதனுக்கு என்று அவனியாள்போத்தந்தாள்
நச்சுமுலைஉண்டாய்; தாலேலோ
நாராயணா அழேல் தாலேலோ 51

இடுப்பில் உடுக்கும் பட்டு நழுவாமல் கட்டும் துணியும், கச்சில் செருகப் பொன்னாலான சிறு கத்தியும் அரைக்குச் சாத்தும் சிறுக் காம்பன் சேலையும்; தோள்களுக்கு அணியா பொன்வளையும். முடியின் உச்சியில்சாத்தமணி இழைத்த சுட்டியும், காம்புடைய ஒழுங்கான பொற்பூவும் அடியார்களை எக்காலமும் நழுவ விடாதவனுக்கென்று நிலமகள் வரவிட்டாள். பூதனையை முடிக்க முலையுண்டவனே தாலேலோ! நாராயணனேஅழாதேதாலேலோ!

மெய் திமிரும் நானப் பொடியோடு மஞ்சளும்
செய்யதடங்கண்ணுக்குஅஞ்சனமும் சிந்துரமும்
வெய்ய கலைப்பாகி கொண்டு உவளாய் நின்றாள்
ஐயா அழேல் அழேல் தாலேலோ
அரங்கத்து அணையானே தாலேலோ 52

திருமேனியிலே பூசிடச் சந்தனம், கஸ்தூரி, கற்பூரம், மஞ்சள் முதலிய பொடிகளையும், சிவந்து பரந்து நீண்ட கண்களுக்கு மையையும், நெற்றி அழகு பெறச் சிந்தூரமும் கொண்டு வந்து, விரும்பும் கலைகளைத் தன் நாவிலே கொண்டு நடத்துபவளான கலைமகள் அதோ நிற்கிறாள். சகத்ரட்சனே! அழாதேகொள், அழாதே கொள் தாலேலோ. திருவரங்கத்தில் பாம்பைப் படுக்கையாகவுடையவனே தாலேலோ, தாலேலோ.

வஞ்சனையால் வந்த பேய்ச்சி முலை உண்ட
அஞ்சன வண்ணனை ஆய்ச்சி தாலாட்டிய
செஞ்சொல் மறையவர் சேர் புதுவைப்பட்டன் சொல்
எஞ்சாமை வல்லவர்க்கு இல்லை இடர்தானே! (53)

தாய் வடிவுடனே வந்த பூதனையின் முலையைக் கண்ணன் சுவைத்துண்டான். விரோதி ஒழிந்தான் என்கிற மகிழ்வாலே மைவண்ணன், அன்னை யசோதை தாலாட்டினபடிகளைச் செவ்விய சொற்கள் நிறைந்த தாய் பெரியாழ்வார் அருளிய இப்பாசுரங்களை ஓதவல்லவர்களுக்கு ஒரு துயரமுமில்லை.

## அம்புலிப் பருவம்

தன்முகத்துச் சுட்டி தூங்கத் தூங்க
தவழ்ந்து போய்ப்
பொன்முகக் கிண்கிணி ஆர்ப்பப்புழுதி
அளைகின்றான்;
என்மகன் கோவிந்தன் கூத்தினை இள
மா மதீ
நின்முகம் கண்ணுள ஆகில், நீ இங்கே
நோக்கிப் போ 54

நிலவே! திருமுகத்திலே அழகுறக் கட்டிய சுட்டி தவழும்போது பலகாலும் தவழ்ந்து அசையும்படியாகவும் அவன் திருவரையில் சாத்திய பொன்னால் செய்யப்பட்ட கிண்கிணி ஒலிக்கவும், கண்ணன் தவழ்ந்து போய் புழுதி அளைகின்றான். என்மகன் கண்ணன் செய்யும் இக் கூத்துகளை இளம்பிறையே உன் முகத்தில் கண்உண்டாமாகில் கண்படைத்த பயன்பெறும் படி நீ இங்கே பார்த்துப் போ.

என் சிறுக்குட்டன் எனக்கு ஓர் இன்னமுது
எம்பிரான்
தன் சிறுக்கைகளால் காட்டிக் காட்டி
அழைக்கின்றான்;
அஞ்சன வண்ணனோடு ஆடல்ஆட
உறுதியேல்
மஞ்சில் மறையாதே மா மதீ! மகிழ்ந்து
ஓடி வா. 55

நிலவே! கண்ணன் என் சிறுப்பிள்ளை. அவன் தன் பருவத்தால் ஒப்பற்ற இனிய அமிழ்தம் போலேயிருப்பவன். எனக்குப் பிள்ளையாய்ப் பிறந்து, தன் ஆடல்களைக் காட்டி, என்னை அவன் தன் சிறு கைகளால் பலகாலும் உன்னையே காட்டி அழைக்கிறான். இக் கண்ணனுடன் விளையாடக் கருதினாயாகில் முகிலில் மறையாதே! உகந்து ஆதரந் தோன்ற விரைந்து நடையிட்டுவா.

சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்துசோதி
பரந்து எங்கும்
எத்தனை செய்யினும் என்மகன் முகம்
நேரொவ்வாய்;
வித்தகன் வேங்கட வாணன் உன்னை
விளிக்கின்ற
கைத்தலம் நோவாமே அம்புலீ கடிது
ஓடிவா. (56)

நிலவே! எப்போதும் குறையிலா ஒளியால் சூழப்பெற்று நாற்புறமும் சுழன்று, எல்லாத் திசைகளிலும் ஒளி நிரம்பி அழகோடு விளங்கினாலும், என் மகனின் ஒளிமயமானமுகத்துக்கு எல்லாவகையாலும் ஒப்பாகாமாட்டாய். என் மகன் தன் அழகால், பண்பால், மேம்பட்டவன். திருவேங்கட மலையில் எழுந்துள்ளான். என் மகன் உன்னை அழைக்கிறான். அவன்திருக்கை நோவாதபடி மிகவும் விரைந்து ஓடிவா.

சக்கரக் கையன் தடங்கண்ணால் மலர
விழித்து
ஒக்கலைமேல் இருந்து உன்னையே சுட்டிக்
காட்டும் காண்;
தக்கது அறிதியேல், சந்திரா சலம்
செய்யாதே
மக்கட் பெறாத மலடன் அல்லையேல்
வா கண்டாய் 57

நிலவே ஆழிக்கையன், கண்ணன் என் இடுப்பில் இருந்துதன் பரந்த திருக்கண்களாலே உன்னை அன்புதோன்ற மலரப் பார்த்து, வேறொன்றில் கண்வையாதே குறித்துக் காட்டுகின்றான். உனக்குத் தகுதியானதை அறிவாயாகில் எல்லார்க்கும் மகிழ்ச்சியை உண்டாக்கும் நீ, இவனுக்கு வெறுப்புச் செய்யாதே. நீ பிள்ளை பெறாத மலடன் அல்லையானால் வந்து உன்னைக் காட்டிக் கொள்.

அழகிய வாயில் அமுத ஊறல்
தெளிவுற
மழலை முற்றாத இளஞ்சொல்லால்உன்னைக்
கூகின்றான்
குழகன் சிரீதரன் கூவக் கூவ நீ
போதியேல்
புழையில ஆகாதே நின்செவி புகர்
மா மதீ! 58

மதியே! கண்ணன் உன்னைத் தன் எழில் இதழ்ப் பவளத்திலே ஊறும் அமிழ்த மழலையான இனிய சொல்லாலே அழைக்கிறான். கொடுத்தார் முலைப்பாலுண்டு, எடுத்தாருடன் பொருந்தும் கலப்புடையவன்: திருமார்புடையவன். இவன் பலகால் அழைக்கில் நீ கேளாமே போனால், உன் காதுகள் துளையில்லாதவையாகாவா? நீ இது கேளாமே விண்ணில் இயங்கும் உன் ஒளிக்கும் பெருமைக்கும் போகுமோ!

தண்டொடு சக்கரம் சார்ங்கம் ஏந்தும்
தடக்கையன்
கண் துயில்கொள்ளக் கருதிக் கொட்டாவி
கொள்கின்றான்
உண்ட முலைப்பால் அறா கண்டாய் உறங்
காவிடில்
விண்தனில் மன்னிய மா மதீ; விரைந்து
ஓடி வா. 59

வான்மதியே! என் மகன் கதையும் திருவாழியும் சங்கும் அணிகலனாகவும் திருப்படையாகவும் திருக்கையில் உடையவன். இவன் திருக்கண் வளர்ந்தருள நினைத்துக் கொட்டாவி கொள்கிறான். இப்பொழுது இவன் உறங்காவிடில், இவன் உண்ட முலைப்பால் செரிக்காது. விரைந்து ஓடிவா.

பாலகன் என்று பரிபவம் செய்யேல்
பண்டு ஓர் நாள்
ஆலின் இலை வளர்ந்த சிறுக்கன்
அவன்இவன்
மேல் எழப் பாய்ந்து பிடித்துக் கொள்ளும்
வெகுளுமேல்
மாலை மதியாதே மா மதீ மகிழ்ந்து
ஓடி வா. 60

பெருநிலவே! இவன் சிறு பிள்ளையென்று நினைத்து ஏளனம் பண்ணாதே. முன்னொரு காலத்தில் உலகங்களை எல்லாம் தன் திரு வயிற்றில் வைத்து ஆலந்தளிரில் கண் வளர்ந்த சிறு பிள்ளை இவன். இவன் கூடாததைச் செய்து முடிக்கும் குழகன். இவன் சிவந்தால் எழுந்து குதித்து உன்னைத் தானே பிடித்துக் கொள்வான். இப்பெரியவனைச் சிறியனென நினையாமல், உகப்புத் தோற்ற ஓடி வா.

சிறியன் என்று என் இளஞ் சிங்கத்தை இக
ழேல் கண்டாய்
சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச்
சென்று கேள்;
சிறுமைப் பிழை கொள்ளில் நீயும் உன்
தேவைக்கு உரியை காண்;
நிறைமதி நெடுமால் விரைந்து உன்னைக்
கூகின்றான். 61

முழுநிலவே! இளஞ்சிங்கம் போன்ற பிள்ளையைப் பார்த்து, சிறுபிள்ளை என்று இகழ வேண்டா. இவனின் சிறுமை பெருமையை அறிய மகாவலியிடம் செல். மூவடி மண் வேண்டி இரண்டே அடியால் மண் விண் யாவற்றையும் அளந்து விஞ்சிய ஓரடிக்குத் தன்னைச் சிறையிலிட்டதை விளக்குவான். சிறுமை நினைத்துப் பிழை செய்தால், நீயும் அவன் திறத்தில் அடிமைக்குத் தகுந்தவனே. இவன் விரைந்து உன்னைஅழைக்கிறான். நீயும் ஓடி வா.

தாழியில் வெண்ணெய் தடங்கை ஆர
விழுங்கிய
பேழை வயிற்று எம்பிரான் கண்டாய்,
உன்னைக்
கூவுகின்றான்;
ஆழிகொண்டு உன்னை எறியும், ஐயுறவு
இல்லைகாண்;
வாழ உறுதியேல், மா மதீ மகிழ்ந்து
ஓடி வா. 62

பெருமதியே, தாழியிலே சேமித்திருக்கிற வெண்ணெயை ஆசையுடன் கை நிறைய அள்ளி விழுங்கியவன். இவன் வெண்ணெயின் அளவு பருத்துப் பெருத்திருக்கிற திருவயிற்றை உடையவன். இவன் எங்கள் குலத்தலைவன். இவன்உன்னை ஆணையிடாமல்அழைக்கிறான். நீ வாராதிருந்தால் திருவாழியால் உன் தலையை அறுப்பான்; முடிந்து போகாதே. வாழ நினைத்தால் உன் பெருமைக்கு ஏற்ப மகிழ்ந்து ஓடி வா.

மைத்தடங் கண்ணி யசோதை தன்மகனுக்கு
இவை
ஒத்தன சொல்லி உரைத்தமாற்றம் ஒளிபுத்தூர்
வித்தகன் விட்டுசித்தன் **விரித்த தமிழ்** இவை
எத்தனையும் சொல்ல வல்லவர்க்கு இடர்
இல்லையே. 63


மைக் கண்களையுடைய அசோதை, தன் மகன் கண்ணனுக்கு நினைவுக்கும் சொல்லுக்கும் சேர்ந்தவற்றைச் சொல்லி மேன்மையும் வன்மையும் தோன்றும்படியாக நிலவைக் குறித்துப்பெரியாழ்வார் சொன்ன பாசுரத்தை, சொல்ல வல்லவர்க்கு இடர்ப்பாடு ஒன்றுமில்லை.

**—(தொடரும்.)**

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை. சென்னை-600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ பிஎச்.டி.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம். அரசினர்-தோட்டம். சென்னை-600002.




குன்றத்தூரில் நடைபெற்ற தெய்வச் சேக்கிழார் விழாவில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திருமிகு கா. ப. பட்டாபிராமன் பி.ஏ.பி.எல். அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற நெறியைப் பின்பற்றி, நாட்டுமக்கள் தொண்டுணர்வோடு வாழ்வதே சேக்கிழார் பெருமானுக்கு நாம் செய்யும் நன்றிக்கடன்'' என்று வற்புறுத்தினார் நம் அமைச்சர் அவர்கள்.



குன்றத்தூரில் நடைபெற்ற தெய்வச் சேக்கிழார் விழாவில் நம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். அவர்கள் கலந்து கொண்டு தலைமையுரை ஆற்றினார்கள். ''பட்டிதொட்டி எங்கும் சேக்கிழார் பெருமான் புகழ் பரவும்வகையில் அறநிலையத்துறை சேக்கிழார் பெருமானுக்கு விழா எடுத்துச் சிறப்பிக்கும்'' என்றார் நம் ஆணையாளர் அவர்கள்.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையில் 21.7.94 அன்று திருக்கோயில் நிர்வாக வாரியக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. திருக்கோயில் நிர்வாக வாரிய உறுப்பினர்கள் அனைவரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

